# வாக்கும் வாழ்வும்

வானொலி உரைத் தொகுப்பு

080
செல்ல
S-IPR

சைவப்புலவர் க. செல்லத்துரை

# வாக்கும் வாழ்வும்

வானொலி உரைத் தொகுப்பு

சைவப்புலவர் சு. செல்லத்துரை
இளவாலை

தெல்லிப்பழை
கலை இலக்கியக்கள வெளியீடு - 11
1999.10.10

## சமர்ப்பணம்

இப்புவியில் என்னை
இனிதாக வாழவைத்த
அப்பு சுப்பிரமணியம்
ஆச்சி பத்தினிப்பிள்ளை
ஒப்பில் பதங்களுக்கு
உவந்தளித்தேன்
இந்நூலை.

# வாக்கும் வாழ்வும்

வானொலி உரைத் தொகுப்பு

நூலகம்

## உள்ளே உள்ளவை


1. பதிப்புரை
2. அணிந்துரை


### சைவநற்சிந்தனைகள்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | வாக்கும் வாழ்வும் | 01 |
| 2. | நித்திய விரதம் | 03 |
| 3. | வல்லமை பெறும் வழி | 05 |
| 4. | மறக்கருணை | 07 |
| 5. | சாந்துணையும் கற்போம் | 09 |
| 6. | யார் பெரியர் | 11 |
| 7. | அழுக்காறு அகற்றி வாழ்வோம் | 13 |
| 8. | கோமாதா குலம் காப்போம் | 16 |
| 9. | தீதும் நன்றும் பிறர்தரவாரா | 18 |
| 10. | எது பெரிது | 20 |


### கலைப்பூங்கா உரைகள்


| | | |
|---|---|---|
| 1. | கவிதைக் கற்போவியம் | 23 |
| 2. | இளங்கோ திருமுகம் | 27 |
| 3. | யாவரும் கேளிர் | 31 |


### சைவச் சொற்பொழிவு


| | | |
|---|---|---|
| 1. | தடுமாறாத சைவம் | 34 |
| 2. | தருமத்தின் வழிச்செல்வோம் | 39 |

# பதிப்புரை

சைவசமயக் கருத்துக்கள் பல சைவசமயிகள் என்று சொல்லிக் கொள்வோராலேயே அண்மைக் காலத்திற் பிழைபட விளக்கமுஞ் செய்யப்பட்டுள்ளன. புதுமையூடு செல்லும் வேட்கை, அன்னைச் சமயக் கொள்கைப் போக்குகள், அறியாமை முதலியன இந்தத் தவறுக்கான காரணங்களாகலாம்.

எது எவ்வாறிருப்பினும் எமது சைவசமயக் கொள்கைகளுக்கு முரண்பாடாகச் செல்வது பொருத்தமாகாது. இந்தக் கருத்துத் தெளிவினைத் தமது சைவச் சொற்பொழிவுகள் மூலமும், சைவசமயக் கட்டுரைகள், கவிதைகள், நாடகங்கள் மூலமும் எல்லோரும் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் வெளிப்படுத்திக் கொண்டிருப்பவர் சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்கள்.

இந்த வகையில், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன (S.L.B.C.) ஒலிபரப்பிலும், இலண்டன் சர்வதேச ஒலிபரப்புக் கூட்டுத்தாபன (I.B.C) ஒலிபரப்பிலும் வழங்கிய சைவ நற்சிந்தனைகள் பத்தும், கலைப்பூங்கா இலக்கியச் சிந்தனைகள் மூன்றும், சைவசமயச் சொற்பொழிவுகள் இரண்டும் "வாக்கும் வாழ்வும்" எனும் நூலுருவில் வெளிவருகின்றன.

இதனைக் கலை இலக்கியக்களப் பதிப்பாக வெளியிடச் சம்மதம் தந்த சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்களுக்கும், நூலுக்குப் பெறுமதி வாய்ந்த அணிந்துரை வழங்கிக் கௌரவித்த, கொழும்புத் தமிழ்ச் சங்கத்தலைவர் சி.சிவகுருநாதன் அவர்களுக்கும், அழகுற அச்சிட்டுதவிய கொழும்பு 'பேசும் பேனா' பதிப்பகத்தினர்க்கும் நன்றி கூறுகின்றோம்.

மாணவர்களுக்கும், பெரியவர்களுக்கும் பயன்படக்கூடிய இந்நூல் நற்பயன் விளைக்கும் என்பது எமது நம்பிக்கை.

18/1, 9ஆவது ஒழுங்கை,
வாசல வீதி,
கொழும்பு-13.

**பண்டிதர் சி.அப்புத்துரை**
இயற்குழுத் தலைவர்,
தெல்லிப்பழைக் கலை இலக்கியக்களம்.

# அணிந்துரை

இளவாலை சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்கள் மரபுவழிக் கல்வி பயின்றவர். இலக்கண இலக்கியங்களையும் சைவசமய நூல்களையும் ஐயந்திரிபறக் கற்ற தமிழ் ஆசான்.

சைவப்புலவர் அவர்கள் அவ்வப்போது வானொலி ஊடகம் வாயிலாக அளித்து வந்த நற்சிந்தனைகளைத் தொகுத்து நூலாக்குகின்றார் என்ற செய்தி கற்றார்க்கும் மற்றார்க்கும் பேருவகை தரத்தவறாது. பெரியார் செல்லத்துரை வெறும் தமிழ் ஆசிரியர் மட்டுமல்லர். முதலாந்தர அதிபராயிருந்து ஓய்வு பெற்றவர். இவர் ஒரு சிறந்த கலைஞருமாவர். இவ்வுலகிற் சிறந்த பணி அறியாமை இருளகற்றி அறிவு என்ற ஒளி ஊட்டும் பணியாகும். எழுத்தறிவித்தவன் இறைவனாவான். ஆனால் எழுத்தறிவுடன் கலை அறிவையும் புகட்டும் பெரியாரை என்னென்று அழைப்பது?

சைவப்புலவர் செல்லத்துரை தமிழ் அறிவு புகட்டியதோடு தமிழ் நாடகம் வளர்ச்சி காணவும் பாடுபட்டவர், வசதிகள் குறைந்த பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றிய போது கூட இவர் மக்களின் கலைப்பசியைத் தீர்ப்பதில் கவனமெடுத்து வந்தவர். பாடசாலை மாணவர்களுக்கு நாடகப் பயிற்சி அளித்து நாடகங்களை அரங்கேற்றினார். இதன் மூலம் மக்கள் மத்தியில் அதிக கவனம் பெறாதிருந்த பாடசாலைகளும் சமூகத்தின் அவதானிப்புக்குள் வரத்தொடங்கின. கூத்தாடிகள் என்று இகழ்ந்த மக்கள் இக்கலைஞர்களைப் போற்றத் தொடங்கினர். இப்பணிகளின் மூலம் தமிழ் நாடகம் வளர்ச்சி காண உதவினார். கலையரசு சொர்ணலிங்கம், பேராசியர் சு.வித்தியானந்தன் போன்ற நாடகத் துறை பெரியார்களின்

நன்மதிப்பைப் புலவரவர்கள் இந்த அர்பணிப்புச் சேவை காரணமாகப் பெற்றிருந்தார்கள்.

புலவரைப் பார்த்தவுடனேயே இவரது கலைத்திறனும் புனித உள்ளமும் பளிச்சிட்டுத் தோன்றும். தூய வெண் ஆடையும் அமைதி யான பேச்சும் எவரது உள்ளத்தையும் கவரத் தவறா. இவருடன் பேசிக் கொண்டிருப்பதே பேரின்பம் தரும். கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் புதன்கிழமை தோறும் நடைபெறும் அறிவோர் கூடல் நிகழ்ச்சியின் போதே முதன்முதலாக இவரைச் சந்திக்கும் வாய்ப்பை நான் பெற்றேன்.

புலவரவர்கள் குறளுக்கு அளித்த பொருளும், அவர் தந்த வியாக்கியானங்களும் உண்மையில் என்னை வசீகரித்தன. பரிமேலழகர், முனிசாமி, வரதராசனார் உரைகளிலும் பார்க்க கவர்ச்சி மிக்கனவாக இவரது விளக்கங்கள் அமைந்தன. 'இவரே குறளுக்கு புதிய உரை எழுதினால் என்ன' என்று கூட எண்ணினேன். அத்துணைச் சிறப்பாக இக்கால நடைமுறை வர்த்த மானங்களை அனுசரித்து இவர் உரை செய்தார். ஒவ்வொரு குறளையும் எடுத்து விளக்கியபோது ஏனைய இலக்கியங்களில் கூறப்பட்ட கருத்துக்களையும் ஒப்பு நோக்கி இவர் கொடுத்த விளக்கம் எல்லோரையும் கவர்ந்தது. அத்துணை அறிவு மிக்க வராய்த் திகழ்பவர் புலவரவர்கள், இந்நூலில் தரும் விளக்கங்கள் அனுபவ ரீதியிலானவை. பண்டைய இலக்கியங்களை அடிப்படை யாகக் கொண்டவை.

இவ்வெளியீடு நிச்சயமாக சமூகம் ஆன்மீக ரீதியில் முன்னே ற்றம் காண உதவும் என்பதில் சந்தேகமில்லை. இவரது பணி வளரட்டும். இறையாசி கிட்டும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

*தலைவர் கலைக்கழக இலக்கியப் பிரிவு*
*சட்டக்கல்லூரி விரிவுரையாளர்*
*முன்னாள் ஆசிரியர் தினகரன்.*
1999.09.10

**இ.சிவகுருநாதன் எம்.ஏ**
*தலைவர் கொழும்பு தமிழ்ச் சங்கம்*

# வாக்கும் வாழ்வும்

இவ்வுலகில் எண்ணில்லா மக்கள் வாழ்ந்து மறைந்திருக்கி றார்கள். இவர்களில் ஒரு சிலரைத்தான் இந்த உலகு எந்நாளும் நினைந்து போற்றுகின்றது. இவ்வித போற்றுதலுக்குரியவர்கள் எத்தகையர் என்பதை நோக்கும் போது வாக்கும் வாழ்வும் ஒன்றாயு டையவர் தான் அவர் என்பது விளங்கும். அதாவது சொல்லும் செயலும் ஒன்றாயிருக்க வேண்டும். சொல்லுதல் யார்க்கும் எளிய சொல்லிய வண்ணம் செய்தல் அரிது என்பது வள்ளுவப் பெருமான் வாக்கு. ஆதலால் சொல்லுகின்றபடி வாழ்ந்து காட்டியவர்களே பெருமைக்குரியவர்கள். அவர்களால் தான் இந்த உலகம் வாழ்கிறது.

உள்ளத்தால் பொய்யாது உள்ளதையே சொல்லிச் சொன்ன படி வாழ்ந்தவர்கள் உள்ளத்தால் பொய்யாத உத்தமர்களென வரலாறும், இலக்கியங்களும் எங்களுக்கு எடுத்தியம்புகின்றன. அவர்களது வாக்கும் வாழ்வும் ஒன்றாயிருந்ததால் அவர்கள் வாழ்வாங்கு வாழ்ந்தவர்களாகவே போற்றப்படுகின்றார்கள்.

உள்ளம் தூய்மையாக இருந்தால் அங்கு உண்மையொளி உண்டாகும் "உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கி னிலே ஒளியுண்டாகும்" என்றார் மகாகவி பாரதியார். அவர்களுடைய வாக்கினாலே இந்த உலகம் வாழும்.

அரிச்சந்திரன் விஸ்வாமித்திர முனிவருக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதற்காகத் தன் மனைவியையும் மகனையும் வீதியில் விலை கூறி விற்கிறான். ஈற்றில் தன்னையும் விற்கிறான். நாடுகாத்த மன்னன் சுடுகாடு காக்கும் நிலை வந்த போதும், தன் மனைவியையே தன்கையால் வெட்ட வேண்டிய தர்ம சங்கட நிலை வந்த போதும் "பதி இழந்தனம், பாலனை இழந்தனம், படைத்த நிதி இழந்தனம் கதி இழக்கினும் கட்டுரை இழக்கிலோம்" எனக்கூறி வெட்டுகிறான்.

உள்ளத்தால் பொய்யாது ஒழுகிய படியால் வெட்டிய வாள் சந்திரமதியின் கழுத்தில் மாலையாக விழுந்தது. மீண்டும்

அரசும் வாழ்வும் பெற்று என்றும் இந்த உலகுபோற்றும் உத்தமர் களாகும் பெருமைக்குரியரானார்கள்.

இளமைப் பருவத்தில் அரிச்சந்திரன் நாடகம் பார்த்ததால் சத்தியம் தவறாது வாழ்தலையே தன் இலட்சியமாகக் கொண்ட காந்தி அடிகள் "தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டுப் பாழ்பட்டு நின்ற பாரத நாட்டுக்குச்" சுதந்திரம் பெற்றுக் கொடுத்து மகாத்மாவானார். அவர் வாழ்ந்த சத்திய வாழ்வே இன்றும் உலகில் அஹிம்சையைக் காத்து நிற்கிறது.

உள்ளதை உள்ளபடி சொல்லி அதன்படி ஒவ்வொருவரும் வாழ்ந்தால் பொய்மை இல்லாமலே போய்விடும். ஒளியின் இன்மை இருளாவது போல உண்மையின் இன்மையே பொய்யாகும். இருளை நீக்குவதற்குச் செயற்கையான விளக்குகளை ஏற்றுவது போலப் பொய்யை நீக்குவதற்காகச் சட்டம், பொலிஸ், நீதிமன்றம், அதிரடிப்படை, அணுவாயுதங்கள் என்று இப்படி எத்தனையோ கெடுபிடிகளால் உலகு அழிகிறது. உண்மை நிலைக்குமாயின் இவையெதுவும் தேவைப்படா.

மகாகவி பாரதியார் சின்னஞ்சிறு பிள்ளையைப் பார்த்துப் "பொய்சொல்லக் கூடாது பாப்பா" என்று பாடியது மகா மந்திரமா கும். பிள்ளைப் பருவம் முதல் ஒவ்வொருவரும் உண்மையே பேசி வளர்வார்களாயின் இந்த உலகின் அவலங்கள் எல்லாம் அகலும்; அமைதி குடிகொள்ளும். ஒவ்வொரு வீட்டிலும் இது பேணப்பட வேண்டும். ஒவ்வொருவரும் உண்மை பேசும் உத்தமர்க ளாகலாம். இந்த உலகத்தார் உள்ளங்களிலெல்லாம் போற்றப்படும் பெருமைக்குரியவராகலாம்.

*"உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்*
*உள்ளத்துள் எல்லாம் உளன்"*

என்ற வள்ளுவப் பெருமான் வாக்கின்படி வாக்கும் வாழ்வும் ஒன்றாக வாழ்ந்து என்றும் இன்புற முயல்வோமாக.



# நித்திய விரதம்

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க" என்று நாம் இறை வனை வழிபடும் போதெல்லாம் வேண்டுதல் செய்கிறோம். இந்த உலகில் இன்பமே எவ்விடத்தும் நிலை கொள்ள வேண்டும்; எல்லோரும் இன்புற்று வாழ வேண்டும் என்பது இந்த வேண்டுதலின் பொருளாகும். இதனை நாம் வேறெங்கோ இருந்து எதிர்பார்க்கின் றோம். எல்லோரும் என்று சொல்லும் போது நாமும் அதில் அடங்கிவிடுகின்றோம். அந்த இன்ப வாழ்வில் நாமும் திளைக்க ஆசை கொள்கின்றோம்.

அதேவேளை உலகெல்லாம் இன்பம் சூழ்வதற்கு நாமென்ன செய்தல் வேண்டும், அதில் எங்கள் பங்கு என்ன என்பதை ஒவ்வொ ருவரும் ஆழமாகச் சிந்திக்க வேண்டும். உழைப்பவன் தானே ஊதியத்தைப் பெறமுடியும்; உழைப்பு இல்லாமல் ஊதியம் கிடைக்க மாட்டாது. ஆதலால் இன்பத்தை ஊதியமாகப் பெறுவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்.

நாம் விரும்பியவை கைகூட வேண்டும் என்று விரதம் இருக் கின்றோம். சாதாரணமாக விரதம் என்றாற் சில விசேட நாட்களில் ஒரு நேரம் உண்ணாதிருத்தல் என்ற அளவிற் சுருங்கி விட்டது. உண்மை விரதம் அதுவன்று. வாழ்வில் எக்காலமும் நித்திய விரதம் இருக்க வேண்டும். தனக்கும் பிறர்க்கும் துன்பம் அகன்று இன்பம் சூழ நித்தியம் மேற்கொள்ள வேண்டிய விரதங்கள் இரண்டுள. ஒன்று உண்மை பேசுதல், மற்றது கொல்லாமை.

உண்மையால் விளைவது இன்பம்; பொய்மையால் விளை வது துன்பம்; என்றும் நிலையானது உண்மை. உண்மையல்லாதது பொய்மை. ஆதலால் எக்காலத்தும் உள்ளதையே நினைந்து உள்ள தையே சொல்லி உள்ளபடி அதுவாகிய உண்மையைக் கடைப்பிடித்து வாழவேண்டும். "உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்" என்ற வள்ளுவப் பெருமான் வாக்கின் படி உண்மைபேசி உத்தமர்களாக வாழ்ந்து தமக்கும் பிறர்க்கும் எக்காலத்தும் இன்பம் விளைத்த மகாத்மா காந்தியடிகள், நாவலர்

பெருமான் போன்றவர்களை முன்மாதிரியாகக் கொள்ள வேண்டும். உண்மை நிலைத்தால் உலகம் இன்பமயமாகும்.

"கொல்லான் புலாலைமறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிரும் தொழும்" என வள்ளுவப் பெருமான் சொன்னதையும் "கொல்லா விரதம் குவலயமெல்லாம் ஓங்க எல்லார்க்கும் சொல்லுவதென் இச்சைபராபரமே" எனத் தாயுமான சுவாமிகள் சொன்னதையும் சிந்திக்க வேண்டும். கொலை செய்பவர்கள் கொடியவர்கள். ஆனால் நல்லவர்களும் கொலை செய்து விடுகிறார்கள் அல்லது கொலைக்குக் காரணர்களாகி விடுகிறார்கள். அதாவது தமது உணவுக்காகப் புலால் உண்ணும் பழக்கத்தால் கொலைகாரர்களாகவோ அல்லது கொலைக்குக் காரணர்களாகவோ ஆகி விடுகின்றார்கள். இவ்வித வாழ்வால் "எல்லா உயிர்களும் இன்புற்றிருக்க முடியாத நிலை ஏற்படுகிறது. ஆதலாற் கொல்லாமை நித்திய விரதமாகக் கொள்ளப்பட வேண்டும். புலால் உண்ணாமல் விடுதலின் மூலம் கொல்லாமை எனும் விரதத்தைக் கைக்கொள்ள முடியும்.

உண்மை பேசுதலும், கொல்லாமையும் இலகுவான, ஆனால் உறுதி பயக்கும் - நம்மை உத்தமர்களாக்கும் அதியுயர்ந்த விரதங்கள் ஆகும். உண்மையைச் சொல்லுதல் இலகு; அதுபோற் கொல்லாதிருத்தலும் இலகு. உண்மையை மறைத்துப் பொய் சொல்ல முயலும் போது தொடர்ந்து பல பொய்களைச் சொல்லி அவலப்பட்டு அவமானப்பட்டுப் பிறரை வருத்தித் தானும் வருந்த வேண்டி ஏற்படுகிறது.

அதுபோலத் தமது உணவுக்காகப் பிற உயிர்களைக் கொல்லும் போதும், கொலைக்குக் காரணர்களாகும் போதும் அவற்றையும் வருத்தித் தானும் பாவத்திற்கு ஆளாக வேண்டி வருகிறது.

ஆதலால் "இன்பமே சூழ, எல்லோரும் வாழ" உண்மை பேசுதலையும், கொல்லாமையையும் நித்திய விரதமாகக் கொள்வோமாக.



# வல்லமை பெறும் வழி

புரட்டாதி மாத அமாவாசைக்கு அடுத்த நாள் தொடங்கி அடுத்துவரும் ஒன்பது நாள்கள் நவராத்திரி காலமாகும். எல்லாம் வல்ல பரம்பொருளைச் சக்தி வடிவில் வைத்து வணங்கும் காலம் இது. முதல் நாளிற் கும்பம் வைத்து அதிற் சக்தியை எழுந்தருளச் செய்து ஒன்பது நாட்களும் பூசை வழிபாடு செய்வது வழக்கம். சக்திக்குச் சிறப்பான பூசைக்காலம் இராக்காலம் ஆதலால் இது நவராத்திரி எனப்படுகிறது.

எங்கும் நிறைந்து எல்லாமாய் இருக்கிற அன்னை பராசக்தியே இந்த உலகப் பொருட்கள் அனைத்திற்கும் இயக்க சக்தியாக இருக்கின்றாள். மெய்யியலில் மட்டுமன்றி அறிவியல் எனப்படும் விஞ்ஞானத்திற் கூட இவ்வுலகு எங்கும் சக்திமயமாக இருப்பது உண்மை எனக்கொள்ளப்படுகின்றது. எனவே எங்கும் நிறைந்திருக்கும் சக்தியே எம்மை வாழ்விக்கின்றது என்பது எல்லோரும் ஏற்றுக் கொள்ள வேண்டிய உண்மையாகும்.

நாம் வாழ்வதற்கு நல்ல உடல் உள உறுதி தரவல்ல வீரம் வேண்டும்; நிறைந்த பொருள்வளம் மிக்க செல்வம் வேண்டும்; தெளிவான கல்வி அறிவு வேண்டும். இவை மூன்றும் அதாவது வீரமும், செல்வமும் கல்வியும் இருந்தால் வாழ்வு பூரண மகிழ்வுள்ளதாக அமையும். இவை மூன்றும் ஒன்றுடனொன்று பிரிக்க முடியாத இணைப்பு உடையனவாயிருத்தல் வேண்டும். அடுப்புக்கு மூன்று கல் வேண்டும். அவற்றுள் ஒன்றில்லாவிட்டாலும் அடுப்பு அமைக்க முடியாது. அதைப் போன்ற இன்றியமையாத இணைப்பு உடையவை தான் வீரமும் செல்வமும் கல்வியும்.

இவ்வுலகம் சக்தியும் சிவமுமாய தன்மையுடையது. அதனாலே தான் உலகியற் பொருட்கள் எல்லாம் குணமும் குணியுமாகவுள்ளன. குணத்தையுடையது குணி. ஒவ்வொரு பொருளுக்கும் குணம் உண்டு. குணியிலிருந்து குணத்தைப் பிரிக்க முடியாது. விளக்கில் ஒளி இருக்கின்றது. ஒளியைப் பிரித்தால் அது விளக்காகாது. மலரில் அதன் குணமாய நிறம் இருக்கிறது. நிறத்தைப்

பிரிக்க முடியாது. பிரித்தால் மலர் மலராய் இராது. அது போலச் சிவமும் சக்தியும் பிரிக்கமுடியாதவை. இயக்க சக்தியாகிய பராசக்தியும் இயங்கும் சக்தியாகிய சிவமும் எங்கும் நிறைந்து, எதிலும் கலந்து, எல்லாமாய் இருந்து எம்மை வாழ்விக்கின்றன. அந்தச் சக்தியை நாம் எமதாக்கிக் கொள்ள வேண்டும். மனிதன் தனக்கும் பிறர்க்கும் பயன்தரவல்ல நிறைவான வாழ்வுக்குரிய சக்தியை தன்னுள் பெற்றுக் கொள்ளக்கூடிய சிறப்பான வழிபாட்டுக் காலம் நவராத்திரிக்காலமாகும்.

அதி உயர்ந்த பொருட்களைத் தெய்வீக வடிவிற் காண்பது சைவத்தின் தனித்துவ இயல்பு. அதன்படி வீரத்தைத்தரும் சக்தியைத் துர்க்கையாக முதல் மூன்று நாள்களும், செல்வத்தைத் தரும் சக்தியை இலக்குமியாக நடு மூன்று நாள்களும், கல்வியைத் தரும் சக்தியைச் சரஸ்வதியாக இறுதி மூன்று நாள்களும், வழிபாடு செய்து பத்தாம் நாள் விஜயதசமி அதாவது வெற்றி பெற்ற பத்தாம் நாள் என மகா நோன்பு இருந்து வழிபாடு நிறைவு செய்யப்படும்.

வீரத்திற்குரிய துர்க்கை உமையாகச் சிவபெருமானின் உடலில் இடப்பாகத்தில் இருக்கின்றாள். செல்வத்திற்குரிய இலக்குமி, மகா விஷ்ணுவின் சக்தியாக அவன் மார்பில் இருக்கிறாள். கல்விக் குரிய சரஸ்வதி பிரமதேவனின் சக்தியாக அவர் நாவில் இருக்கிறாள். எனவே வீரசக்தி துர்க்கை உடலையிடமாகவும், செல்வச் சக்தி இலக்குமி மனதை இடமாகவும், கல்விச் சக்தி சரஸ்வதி நாவையிடமாகவும் கொண்டிருப்பதைக் காண்கின்றோம்.

நாம் எக்கருமத்தையும் முதலில் நினைக்கின்றோம், பின் சொல்கின்றோம், அதன்பின் செய்கின்றோம். நினைப்பதுமனம், சொல்வது நா, செய்வது உடல். இவற்றைச் சைவசமய வழக்கில் திரிகரணங்கள் என்போம். மனம் வாக்கு காயம் எனும் திரிகரணங்களும் தூய்மையாகவும், உறுதியாகவும், தெளிவாகவும் இருந்தாலே எடுத்த காரியம் சித்தியாகும். அங்கு சக்தி உறைவாள்.

கடவுள் எமக்கு நேரில் வந்து நாம் கேட்பதைத் தருவதில்லை. அவர் எம்முடனாகி, எமக்குள் நின்றே கருமத்தை நிறைவாக்கித் தருகின்றார். எனவே நவராத்திரிக் காலத்தில் எங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருட் சக்தியாகிய வல்லமையை எமது மனதிலும் வாக்கிலும் செயலிலும் வருவித்துக் கொள்வோம்.



# மறக்கருணை

இறைவன் எமக்கு நல்வாழ்வைத் தந்து எம்மை நல்வழியில் வாழ வைக்கின்றான். இந்த வாழ்வும் வளமும் சிவன் தந்தது என்ற நன்றி மறந்து நல்லதை மறந்து, அல்லதைச் செய்யும் போது இறைவன் எம்மைத் தண்டித்துத் திருத்துவதற்காகத் துன்பத்தைத் தந்து வருத்துகின்றான்.

இறையொருவர்; அவர் சிவபெருமானே. ஏகனாகிய சிவபெருமானை வணங்கும் நாம் விநாயகர், முருகன், வைரவர், வீரபத்திரர் முதலான வேறுபல தெய்வங்களையும் வணங்குவதேன் எனும் வினா எழுகின்றது. சிவனன்றி வேறு தெய்வம் இல்லை. சிவனே அத்தெய்வங்களாகி வந்து ஆன்மாக்களை உய்விக்கின்றார் என்பதே உண்மை. "யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே மாதொருபாகனார்தாம் வருவர்" என்பது சிவஞான சித்தியார் கூறும் உண்மை. இந்த வாழ்வும் வளமும் சிவன் தந்தது என்ற நன்றி மறந்து, தம்நிலை மறந்து, சிவனை மறந்து, கொடுமை செய்யும் கொடியவர்களையும் அடியவர்களாக்கும் சிவபெருமானின் மறக்கருணையே மூர்த்தி பேதங்களுக்குக் காரணமாகும்.

சிவபெருமானிடம் வரம் பெற்ற கஜமுகாசுரன் வரம் பெற்று வந்த வலிமையால் நன்றி மறந்து உலகில் வாழ் உயிர்களை வருத்தினான். அவனது கொடுமைக்காற்றாத மனிதரும் தேவரும் முனிவரும் சிவனிடம் முறையிட்டனர். சிவபெருமானே விநாயகராகி வந்து அவனை வதம் செய்தார். அவன் தலைவலியால் பெருச்சாளியாகி நின்று எதிர்த்த போதும் அவனைக் கொன்றுவிடாமல் அருட்பார்வையால் அவனது ஆணவ முனைப்பையடக்கித் தனக்கு வாகனமாக்கி அருள் பாலித்தார்.

சூராதி அவுணர்கள் சிவபெருமானிடமிருந்து பெற்ற வரத்தை மறந்து, சிவனையும் மறந்து தேவரையும், முனிவரையும் கொடுமைப் படுத்தியபோது முருகனாகி வந்து சூரனை வதம் செய்தார். சூரன் சேவலும் மயிலுமாகி நின்று எதிர்த்த போது அருட்பார்வையால் அவனது ஆணவத்தையடக்கி மயிலை வாகனமாகவும், சேவலைக்

கொடியாகவும் ஆக்கி அருள் பாலித்தார்.

படைத்தற் கடவுளாகிய பிரமா தனக்கும் ஐந்து தலை சிவனுக்கும் ஐந்துதலை, தான் படைப்பவன்; சிவன், தான் படைத்ததை அழிப்பவன்; ஆதலால் தானே பரம் பொருள் எனக் கருதிய போது சிவபெருமான் வைரவராகி வந்து பிரமனின் ஒருதலையைக் கிள்ளியெடுத்து ஏனைய தேவர்களிடம் இரத்தப் பிச்சையேற்று அவர்களின் ஆணவத்தை அடக்கி அருள் புரிந்தார்.

தவம் செய்து சிவனிடமிருந்து உமா தேவியாரைத் தனக்கு மகளாகப் பெற்றான் தக்கன். அதனால் சிவன் தனக்கு மருமகன் தானே என்று செருக்குற்றுச் சிவனை அவமதித்து விஷ்ணுவைத் தலைவனாகக் கொண்டு ஒரு யாகம் செய்தான். தக்கனுக்குப் பயந்த தேவர்கள் எல்லோரும் அதிற் பங்கு கொண்டனர். சிவபெருமான் வீரபத்திரராகிச் சென்று யாகத்தை அழித்துத் தக்கன் முதலாய தேவர்களையும் தண்டித்து அருள்புரிந்தான்.

நன்றி மறவாது அன்பின் வழி நிற்போரை இறைவன் அறக்கருணையால் ஆட்கொள்வார். நன்றி மறந்து ஆணவச் செருக்கால் உலகிற்குக் கொடுமை செய்வோரை மறக்கருணையால் தண்டித்துத் திருத்தி அருள்புரிவார். கொடியவர்களையும் அடியவர்களாக்கி ஆட்கொள்ளும் இறைவன் கருணைக்கு எல்லையே இல்லை. இதனைக் கந்தபுராணத்தில் கச்சியப்பசிவாசாரிய சுவாமிகள்

*ஒன்றொரு பயன்தனை உதவினோர் மனம்*
*கன்றிட அவைது கருதிச் செய்வரேல்*
*புன்மொழியவர்க்கவர் புரிந்த நன்றியே*
*கொன்றிடுமல்லது கூற்றும் வேண்டுமோ*

எனக் கூறுவார்

ஆதலால் இப்புராணக் கருத்துகளை மனதுட் கொண்டு இந்த நல்வாழ்வைத் தந்த இறைவனுக்கு நன்றியுடையோராய் உலகிற்கு நல்லதைச் செய்து நற்கதி அடைவோமாக.



# சாந்துணையும் கற்போம்

நான் அண்மையில் ஒரு பேரறிஞரிடம் போனேன். அவருக்கு வயது 85. படித்துக்கொண்டிருந்தார். வணக்கம் சொல்லிவிட்டு அவர் உத்தரவுப்படி அமர்ந்தேன். என்னைப் பார்த்துச் சிரித்தார். 'நான் படிக்கிறேன்; என்னைப் பார்த்த பேரன் "பாட்டா என்ன பரீட்சை எடுக்கப் போறியள்; எப்பரீட்சை? என்று கேட்டான்." அவனுக்குப் பதில் சொல்லாமல் சிரித்துச் சமாளித்து விட்டேன். உடனே நீங்கள் வருகிறீர்கள். ஏன் படிக்கிறனென்று உங்களுக்கு விளங்குதோ" என்றார். நான் பணிவுடன் "வள்ளுவர் சொன்னபடி செய்கிறீர்கள். நானும் அதற்குத்தான் உங்களைத் தேடிவந்தேன்" என்றேன், அவர் தலையாட்டியபடி சிரித்தார்.

*"ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு*
*எழுமையும் ஏமாப்புடைத்து"*

என்ற வள்ளுவப் பெருமானின் திருக்குறளை விளங்கப்படுத்தினார்.

ஒருவன் ஒரு பிறப்பிற் பெற்ற கல்வியறிவு அவனுக்கு அடுத்துவரும் பிறவிகள் தோறும் தொடரும். தொடர்ந்து வரும் பிறப்பின் தேவைக்காகச் "சாந்துணையும் கற்க" என்று சொல்லி வைத்தார்கள் அறநூலார். தேடிய செல்வம் எல்லாம் உடலோடு நின்றுவிடும். கல்வி மட்டும் தான் உடலைவிட்டு உயிர் பிரிந்த பின்னும் உயிருடன் தொடர்ந்து வரும். ஆதலால் கற்றலே முதற்கடன். அவனுடைய கல்வி அறிவினால் அவன் செய்யும் நற்கருமங்களின் காரணமாக நல்ல பலனையும் பேற்றையும் தரும் என்னும் உண்மையை உணரவைத்தார்.

பஞ்ச பாண்டவரிலே 'வில்லுக்கு விஜயன்' என்று போற்றப் படுபவன் அருச்சுனன். சிவபெருமானிடமிருந்து "பாசுபதாஸ் திரம்" எனும் அம்பினைப் பெறச் சிவனை நோக்கி ஒற்றைக் காலில் நின்று கடுந்தவம் செய்கிறான். சிவபெருமான் காட்சி கொடுக்கப் பெருமானின் தரிசனம் பெற்ற அருச்சுனன் தன்னை மறந்த ஆனந்த நிலையிற் "பெருமானே உங்கள் மீது என்றும் ஆரா அன்புடன் இருக்கும் வரம் வேண்டும்" எனக் கேட்கின்றான். "அருச்சுனா உனக்கு இப்போது வேண்டியது "பாசுபதாஸ்திரம்" அதற்காகவே

தவம் செய்தாய். அதனைத் தந்தேன். மறுபிறப் பில் நீ என் மீது ஆறாத அன்பைப் பெறுவாய்" என்று வரம் கொடுத்து மறைகிறார். இது ஒரு இலக்கியச் செய்தி.

கண்ணப்பர் எல்லார்க்கும் அறிமுகமானவர். வேடர் குலத்தில் பிறந்தவர். மிகச் சிறுவயதிலேயே வில்வித்தையில் மகா திறமை சாலியாகிறார். எல்லோரும் வியக்கிறார்கள். தந்தை நாகன் வேடர் குல வழக்கப்படி அவரைக் கன்னி வேட்டைக்கு முதல் முறையாக அனுப்புகிறார். வேட்டையாடிச் சென்றவர் ஒரு காட்டுப் பன்றியைத் தொடர்ந்து செல்கிறார். அது காளத்தி மலை மீது செல்கிறது. தொடர்ந்து சென்று அதை எய்து விழ்த்துகிறார். வேட்டையாடிய களைதீரப் பொன்முகலியாற்றில் நீருண்ணச் சென்றவர் மலையில் சிவலிங்கத்தைக் காண்கிறார். களையும் தாகமும் மறைய அன்புமேலிடுகிறது. ஓடோடிச் சென்று பெருமானைக் கட்டித்தழுவி "இக்காட்டில் தன்னந்தனியே சுவாமி இருக்கலாமா? நானே துணையாயிருப்பேனெனத் தன்னை மறந்த நிலையில் பெருமானை வணங்கிக் காத்திருக்கிறார். ஆறு நாட்கள் கழிகின்றன. பெருமானின் கண்ணில் இரத்தம் வடிகிறது, கண்ணப்பர் "ஊனுக்கு ஊன்" என்பதறிந்து தன்கண்ணையே தோண்டி அப்புகிறார். அக்கண்ணில் இரத்தம் தடைபட மற்றக் கண்ணில் இரத்தம் வடிகிறது. எனக்கு இன்னுமொரு கண்ணுளது. அப்பனுக்கு அதனையும் தோண்டி அப்புவேன் எனத்துணிந்து மற்றக் கண்ணையும் அம்பால் தோண்டும் போது சிவபெருமான் தோன்றி அவர்கையைப் பிடித்து "நில்லு கண்ணப்ப, நில்லு கண்ணப்ப, என் அன்புடைத் தோன்றல் நில்லு கண்ணப்ப" என்று தடுத்து ஆட்கொள்கின்றார்.

வேடுவர் குலத்திற் பிறந்த கண்ணப்பருக்கு இத்தனை பக்தியும் ஞானமும், பரிபக்குவமும், ஆறாத அன்பும் எப்படி வந்தன.

அருச்சுனனின் அடுத்த பிறப்புத்தான் கண்ணப்பர். முற்பிறப்பின் தொடர்ச்சியாக அவனின் வில்வித்தையும்; சிவன் வரம் கொடுத்த படி ஆறாத தலையாய அன்பும் அவனுக்குக் கிடைத்தன. சிவலிங்கப் பெருமானைக் கண்டவுடனே காந்தம் இரும்பைக் கவர்வது போலக் கவரப்பட்டான். முற்பிறப்பின் புண்ணியம் இப்பிறப்பில் சிவப்பேற்றை நல்கியது. ஒருமையில் கற்றது எழுமையும் தொடரும் என்பது பொய்யா மொழியல்லவா?



## யார் பெரியார்

நாம் யார்? எத்தகையவர்? எம் நிலை என்ன? நாம் பெரியவரா சிறியவரா? என்று எம்மைப்பற்றி நாமே அறிதற்கு வள்ளுவர் பெருமான் ஓர் அளவுகோல் காட்டுகிறார்.

*"செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்*
*செயற்கரிய செய்கலா தார்"*

என்பதே வள்ளுவர் காட்டும் அளவுகோல். செய்தற்கரிய செயலை எவர் ஒருவர் செய்கிறாரோ அவரே பெரியவர். செய்தற்கரிய செய்யாதவர் சிறியவர் என்பது அவர் கூற்று. இந்த அளவு கோலால் அளந்து பார்க்கும் போது நாமெல்லாம் சிறியர் எனும் உண்மையை அறிகின்றோம்.

அப்படியாயின் நாம் சிறியவர்களாகவே வாழ்ந்து மடிவதா. அது மானமற்ற, விலங்கு வாழ்வாக வல்லவோ முடியும். விலங்குகள் போல் பசிவந்த போது உணவைத்தேடி உண்டு, உறக்கம் வந்தபோது உறங்கி, இனப்பெருக்கம் செய்து இறத்தல் தான் வாழ்வின் நோக்கன்று. அப்படியாயின் நாமென்ன செயற்கரிய செயலைச் செய்ய முடியும் என்ற ஏக்கம் உண்டாகின்றது.

இந்த ஏக்கத்தைப் போக்கச் செயற்கரிய செய்த ஒருவர் இருவரையல்ல அறுபத்து மூன்று தனியடியார்களையும் ஒன்பது தொகையடியார்களையும் எங்களுக்கு உதாரணமாகக் காட்டுகின்றார் சேக்கிழார். சுவாமிகள் அவர்களது வரலாறுகளை விரித்துரைத்து அவர்கள் செய்த செயற்கரிய செயல்களையும் அதனால் அவர்கள் பெற்ற நற்கதியையும் காட்டுகின்றார். இதற்காகத் திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணம் அவர் பாடித் தந்த அரும்பெரும் பொக்கிசம் ஆகும். சைவசமய மக்களின் வாழ்வியல் எப்படி அமைய வேண்டுமெனக் காட்டும் சைவக் காப்பியம் அதுவாகும்.

அதன் மூலம் எக்குலத்திற் பிறந்தாலும், எத்தொழிலைச் செய்தாலும், அதனூடாகச் சிவத்தொண்டு செய்து, உய்தி பெற்றுச் செயற்கரிய செய்யும் பெரியவராகலாம் என்ற மன உறுதியைத்

தருகிறார். செயற்கரிய செய்பவர் சிவனடியார் எனப் போற்றப்படுவர். சிவனடியார்கள் எப்படி இருப்பார்கள். அவர்களின் புறக்காட்சி எப்படியிருக்கும், அகக்காட்சி எப்படியிருக்கும் என்பதை,

*"மாசிலாத மணிதிகழ் மேனிமேல்*
*பூசுநீறு போல் உள்ளும் புனிதர்கள்*
*தேசினால் எத்திசையும் விளங்கினார்*
*பேசவொண்ணாப் பெருமை பிறங்கினார்"*

என்கிறார். சிவனடியார்களின் உடல் நல்லதையே செய்யும் தூய்மை புடையது. அதில் உருத்திரனாகிய சிவபெருமானின் கருணையாகிய உருத்திராக்க மணிமாலை விளங்கும். சிவப்பேற்றினை உணர்த்த வல்ல வெண்ணிறத் திருநீறு உடலெங்கும் துலங்கும். புறத்தே காணும் திருநீற்றைப் போலவே உள்ளமும் கள்ளங்கபடமற்ற வெள்ளையுள்ளமாக இருக்கும். தங்கள் அருட்பிரவாகத்தினால் எவ்விடத்தும் அருளொளி பரப்புவர். அவர் இருக்கும் இடமெல்லாம் குறைவற்ற நிறைவே குடிகொள்ளும். அவர்தம் பெருமை பேச்சில் அடங்காத் தகைமையுடையது. அதுமட்டுமல்ல.

*"ஆரங்கண்டிகை ஆடையும் கந்தையே*
*ஈரநெஞ்சினர் யாதும் குறைவிலார்*
*பாரம் ஈசன் பணியல தொன்றிலார்*
*வீரம் என்னால் விளம்பும் தகையதோ"*

என்கிறார். அவர் அணியும் மாலை உருத்திராக்கம், அணியும் ஆடை கந்தைத்துணி, ஆனால் அவர்கள் யாதும் குறைவிலா நிறைவு உடையோராவர். எந்நேரமும் மற்றவர் குறை தீர்க்கும் கருணையாகிய ஈரநெஞ்சுடையவராயிருப்பர். இறைவனுக்குத் தொண்டு செய்வதே அவர்தம் மனப்பாரமாயிருக்கும்.

நல்லது கெட்டது எனும் உலகியற் பற்றுக்களைத் துறந்தவர். ஓட்டையும் செம்பொன்னையும் ஒன்றாகவே மதிப்பவர். சிவபெருமானைக் கும்பிடுவதேயன்றி வீடுபேற்றைக் கூட விரும்பிக் கேட்க மாட்டார்கள். இத்தகைய பெரியோராவதற்கு நாமும் முயல வேண்டும். சுயநல மற்றுப் பிறர்க்குதவும் மனப்பக்குவம் பெற்று, செய்யும் தொழிலே தெய்வப் பணியாய்ச் செய்து இறை வழிபாட்டில் திளைத்து இன்புறுவோமாக.



# அழுக்காறு அகற்றி வாழ்வோம்

இவ்வுலகில் வாழும் மக்களில் இருவகையினரைப் பார்க்கின்றோம். ஒருவகையினர் பிறருடைய சீர்சிறப்புக்களையும், மகிழ்ச்சியான வாழ்வையும் பார்த்துத் தாமும் மகிழ்ந்து அவர்களைப் பாராட்டி உவகையுறுகிறார்கள்.

இன்னொரு பகுதியினர் பிறருடைய சிறப்புக்களைக் கண்டு மனம் புழுங்கி அவர்களில் வெறுப்புக் கொண்டு பொறாமைப்படுகிறார்கள்.

இவர்களில் பிறராக்கம் கண்டு மகிழ்வோர் சிலரே; அவர்கள் மன அமைதியாகச் சந்தோஷமாக வாழ்கிறார்கள். பிறராக்கம் கண்டு பொறுக்க முடியாமற் பொறாமைப் படுவோர் பலர். இவர்களுக்கு வாழ்வில் அமைதியே இல்லை. எந்நேரமும் மன உறுத்தல்தான்.

அடுத்தவர் ஆக்கத்தைக் கண்டு பொறுக்க முடியாத குணத்தைப் பெரியோர் அழுக்காறு என்று சொல்வர். அவர்கள் மனமும் வாழ்வும் அழுக்கு நிறைந்ததாய்த் தீமையே விளைவிப்பதாய் இருக்கும். அமைதி மருந்துக்கும் இருக்காது.

*அழுக்காறு எனவொருபாவி திருச்செற்றுத்*
*தீயுழி உய்த்து விடும்.*

என்பார் வள்ளுவப்பெருமான், அழுக்காறு எனும் பாவி ஒருவனுடைய செல்வத்தையும் அழித்து அவனைத் தீய வழியில் செலுத்திவிடும்.

பொறாமை, மற்றவரிலும் பார்க்க மேலானதைத் தாம் பெற வேண்டுமென்ற அவாவை உண்டாக்கும். அவாவெனும் பேராசை மனதிற் குடிகொண்டுவிட்டால் நல்லது கெட்டது எது என்பதை மறந்து, எப்படியும் நினைத்ததை அடைய வேண்டும், யார் என்ன சொன்னாலும் தான் நினைத்ததே சரி எனும் நிலைக்கு ஆளாக்கி விடும்.

அவருடைய நன்மைக்காகச் சொன்னாலும் ஏற்க மாட்டார்கள். பெரியவராயினும் மதிக்கவும் மாட்டார்கள். மதிப்புக்குப் பதில் வெகுளி கொள்வர். வெகுளி அறிவை மறைத்துவிடும்.

வெகுளியினால் யாருடன் என்ன பேசுகிறோம் என்பதை யறியாமல் இன்னாத வார்த்தைகளைப் பேச வேண்டிவரும். அதனால் மற்றவர்க்கு வெறுப்பும் துன்பமும் உண்டாகும். உலகு பழித்து ரைக்கும் நிலைக்கு ஆளாகி அழிவு எய்த வேண்டிவரும். கோபம் பாவத்தைத் தேடித்தரும்.

பொறாமையாகிய அழுக்காறினால் பேராசையாகிய அவா வும், அவாவினால் கோபம் ஆகிய வெகுளியும், வெகுளியினால் தீயவார்த்தைகளாகிய இன்னாச் சொல்லும் ஏற்படும்.

அழுக்காறு மனதில்தான் முதலில் தோன்றும், அதற்கு இடம் கொடுத்தால் அவாவும் சேர்ந்துவிடும். அழுக்காறும் அவாவும் சேர்ந்துவிட்டால் வெகுளி மனத்தில் இருந்து உடலையே ஆட் கொண்டு செய்யாதனவெல்லாம் செய்யச் செய்யும். அதற்கு உதவியாக இன்னாத வார்த்தைகள் வாயில் இடையறாது வந்து கொண்டே இருக்கும். அழுக்காறும், அவாவும், வெகுளியும் இன்னாச் சொல்லும், குடிகொண்டால் மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரணங்களும் அறந்தவறும். நினைப்பதும், சொல்வதும் செய்வது மாகிய அனைத்துமே பாவகருமங்களாகி அழிவையே தரும்.

*"அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் நான்கும்*
*இழுக்கா இயன்றது அறம்"*

என்ற வள்ளுவப் பெருமான் வாக்கின்படி இந்த நாலும் எம்மை அறநெறியினின்றும் வீழ்த்தி அவநெறியில் மாய்த்துவிடும்.

மகாபாரதம் இந்த உண்மையை எமக்கு அறியத்தருகிறது. திருதராட்டிரனும் பாண்டுவும் சகோதரர்கள். மூத்தவராகிய திருதராட்டிரன் பிள்ளைகள் துரியோதனன் முதலாய நூற்று ஒருவர். இவர்கள் கௌரவர்கள் எனப்படுவர்.

தம்பியாகிய பாண்டுவின் புத்திரர்கள் தருமன் முதலிய ஐவரும் பஞ்சபாண்டவர்கள் எனப்படுவர். பாண்டவர்களே மூத்த வர்கள்.





நூலகம்

தருமர் தருமநெறி தவறாதவர். பிறர் எவர் மீதும் பொறாமை கொள்ளாதவர். நல்ல மனம் படைத்தவர். அதனால் அவருக்கு எல்லாரும் நல்லவர்களாகவே இருந்தார்கள். பாண்டவர் புகழ் உலகெலாம் பரவியது.

துரியோதனன் பாண்டவர் பெருமை கண்டு பொறாமை கொண்டான். அவர்களை எப்படியாவது சிறுமைப்படுத்த வேண்டு மென முயன்றான். அவனது மனதில் குடிகொண்ட பொறாமை அவாவை உண்டாக்கியது. பாண்டவர் செல்வம் எல்லாவற்றையும் கவர்ந்துவிட வேண்டுமெனத் திட்டமிட்டான்.

விளையாட்டாகத் தொடங்கிய சூதாட்டத்தில் சூழ்ச்சி செய்து பாண்டவரின் நாடு நகர் செல்வம் எல்லாவற்றையும் பறித்துக் கொண்டு வனத்துக்கு அனுப்பிவிட்டான். அவன் மனதில் பொறாமை யும், அவாவும் சேர்ந்து வெகுளியை உண்டாக்கின. எப்படியாவது பாண்டவர்களை ஒழித்துவிட வேண்டுமெனச் சதி செய்தான்.

வனவாழ்வு முடிந்து வந்த பாண்டவர் தம் உரிமை கேட்ட போது இன்னாத சொல்லி அவர்களை நிந்தித்தான். நீதியைச் சொன்ன பிதாமகர் வீட்டுமர், குலகுருகிருபர், துரோணர் முதல் தெய்வம் கிருஷ்ணன் முதலியோரைக் கூட இன்னாத சொற்களால் இழித்துரைத்தான்.

ஒன்றிலிருந்து ஒன்றாகத் தோன்றிய அழுக்காறும், அவாவும் வெகுளியும் இன்னாச் சொல்லும் ஒருருவாகி மகாபாரத யுத்தத் துக்கே வழிகோலிப் பேரழிவைத் தந்தன. பொறாமை கொண்ட கௌரவர் அழிந்தனர். பொறுமை கண்ட பஞ்சபாண்டவர் வென்றனர்.

பொறாமை கொண்ட கௌரவர் நூற்றொருவர். பொறுமை கண்ட பாண்டவர் ஐவர். இவ்வுலகிலும் பொறாமையுடையோர் பலர், பொறுமையுடையோர் சிலர்.

ஆதலால் அழுக்காறு எனும் பாவி எம்மில் குடிகொள்ள இடமளியாமல், பிறராக்கம் கண்டு மகிழ்ந்து சாந்தியும் சமாதானமும் நிலைக்க வாழ முயல்வோமாக.

# கோமாதா குலம் காப்போம்

சைசமயத்தவர்களாகிய எம்வாழ்வுக்குப் பெருந்துணை யாகப் பேர் உபகாரியாக இருப்பது பசு. எமது பூசை வழிபாட்டுக் குரியது அது. கோமாதா எனச் சைவம் பசுவைப் போற்றுகின்றது.

பெற்றதாய் பிள்ளைக்குக் குழந்தைப்பருவத்தில் மட்டும் தான் பாலூட்டுவாள். பசுவோ நம் அனைவர்க்கும் குழந்தைப் பருவம் முதல் விருத்தப் பருவம் வரை, அதற்கப்பால் உயிர் பிரியும் வேளையிற் பயன்படக்கூடிய வகையிற் கூடப் பால் தரு கின்றது. அதனாலே தாய்மார்களுக் கெல்லாம் தாயாக, அரச மாதாவாகப் பசுவைக் கோமாதாவெனப் போற்றுகின்றோம்.

எமக்குப் பயன் இல்லையெனக் கழித்துவிடும் தவிடு, கஞ்சி, கழுநீர், வைக்கோல், புல், பிண்ணாக்கு இலை குழை முதலான வற்றைத் தான் உண்டு அதிசயிக்கத்தக்க பூரண சத்துள்ள பாலைத் தருகின்றது பசு. அதுமட்டுமல்ல அதன் கழிவுப் பொருள்களான சாணமும் சலமும் கூட எமக்குப் பயிர் வளர்க்கும் உரமாகவும், கிருமிநாசினியாகவும் பயன்படுகின்றன. அதுமட்டுமன்றி வீட்டையும் சுற்றாடலையும் சுத்தமாக வைத்திருப்பதற்குச் சாணியைப் போலப் பயன்படுவது வேறொன்றுமில்லை.

நாம் வணங்கும் எல்லாத் தெய்வங்களும், தேவர்களும், முனிவர்களும் புண்ணிய தீர்த்தங்களும் பூலோகத்தில் பசுவிலே எழுந்தருளி இருக்கின்றார்கள். பசுவை வணங்குவதன் மூலம் எல்லாத் தேவர்களின் அநுக்கிரகத்தையும் பெறமுடியும்.

அதனாலேதான் சிவாலயத்தில் மூர்த்தியைப் பிரதிஷ்டை செய்யுமுன் கருவறையில் பசு விடப்படுகின்றது. புதுவீடு அமைக்கும் இடத்தில் பசு கட்டப்படுகின்றது. திருமணத்தின் போது தம்பதிகள் முதலில் பசுவைத் தரிசனம் செய்கின்றனர். அந்தியேட்டிக் கிரியை யிற் கூடப் பசு தரிசனம் நடைபெறுகின்றது. தானங்களிற் சிறந்த தாகிய கோதானம் உடலைப் பிரிந்த உயிர் நல்லகதி அடைவதற்கு உபகாரமாகச் செய்யப்படுகின்றது. சிவபூசை முடிவிற் செய்யப் படும் கபில பூசைக்குரியதாகவும் பசு வணங்கப்படுகின்றது. அதுமட்டு மன்றிச் சிவாலயத்திற் "கோபூசை" எனப் பசுவுக்குப் பூசை செய்து வணங்கப்படுகின்றது.





சைவக்கிரியைகள் அனைத்திற்கும் வேண்டிய பஞ்சகௌவி யத்திற்குரிய பால், தயிர், நெய், கோசலம், கோமயம் ஆகியவற் றைப் பசுவே தருகின்றது. அபிஷேகத்திற்குரிய பால், தயிர் என்பவற் றையும், தீபம் ஏற்றுவதற்கும், நைவேத்தியம் செய்வதற்கும் உரிய நெய்யையும் தருவது பசுவே. சிவகதியை நல்க வல்ல சிவசின்ன மாகிய திருநீற்றுக்குரிய மூலப்பொருளைத் தருவதும் பசு.

நன்றாகச் சிந்திப்போமானால், வாய்பேசாது எம்முடன் எமக்காக நடமாடும் தெய்வத்திருவுரு பசு என்பதை உணர முடியும். அதனாலேதான் "பசுஓம்புதல்" சிவபுண்ணியம் என எமது சமய சாஸ்திரங்கள் சொல்கின்றன. "யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை" என்பர் திருமூலர் சுவாமிகள். பசுவுக்கொரு பிடி தீன் கொடுப்பதே உயர்ந்த சிவபுண்ணியம் எனில் பசுவின் பெருமை எத்தகையது என்பதைச் சொல்ல வேண்டுவதில்லை.

திருமூலர், சண்டேசுரர், ஆனாய நாயனார், மனுநீதி கண்ட சோழன், ஞானப்பிரகாசமுனிவர் முதலானோர் பசுஓம்புதல் மூலம் சிவகதி பெற்ற செய்திகள் இதற்குச் சான்றாகும்.

ஆனால் சிவகதி தரும் கோமாதாவான பசுவுக்கும் அதன் குலமான மாடுகளுக்கும் இன்று என்ன நடக்கிறது. கொன்று தின்று விடுகிறார்களே! உடல் வளர்க்கும் மலிவான உணவென உண்டு மலிவாகப் பாவத்தைச் சேர்த்துப் பாழ்படுகிறார்களே!!

சைவர்கள் என்று தம்மைச் சொல்லிக்கொண்டு, பசு தந்த திருநீற்றை நெற்றி நிறையப் பூசிக்கொண்டு, அதன் இறைச்சியை உண்பது எவ்வளவு வெட்கம், எவ்வளவு கொடுமை. பசுவின் ஒரு துளி இரத்தம் நிலத்தில் வீழினும் ஒரு கோடி அசுரர் தோன்றி உலகைக் கொடுமைப்படுத்துவர் என்று நீதி நூல் சொல்வதை இன்று நேரில் நிஜமாகக் காண்கின்றோமல்லவா.

சைவர்கள் மட்டுமன்றி மனித குலம் முழுவதுமே உயிர் வாழப் பயன்படும் தெய்வீகப் பசுவையும், அதன் குலமான மாடுகளையும் கொல்லாமற் காக்கும் பணியில் ஒவ்வொருவரும் பங்குபெற வேண்டும்.

# தீதும் நன்றும் பிறர்தரவாரா

நம் வாழ்வில் இன்பமும் துன்பமும் மாறிமாறி வருகின்றன. இன்பம் வரும்போது மகிழ்கின்றோம்; துன்பம் வரும்போது துவழ்கின்றோம். அதேவேளை அத்துன்பம் வேறுயாராலோ வந்ததென மற்றவரைக் குறைசொல்கின்றோம். துன்பத்துக்கு உண்மையான காரணம் என்ன என்பதை நாம் ஆழமாகச் சிந்தித்துப் பார்ப்பதில்லை.

“தீதும் நன்றும் பிறர்தரவாரா” என்று நம் சங்கச் சான்றோர் சொல்லி வைத்துள்ளனர். எமக்கு நன்மையோ தீமையோ பிறரால் வருவனவல்ல என்பது இதன் பொருள். அப்படியாயின் நம்மாலே தான் நமக்கு தீமையும் நன்மையும் வரும் என்பது பெறப்படும்.

தாம்தாமே செய்த வினை தாமே அனுபவிப்பர், என்பது ஆன்றோர்வாக்கு. எனவே எமக்கு வரும் நன்மைக்கும் தீமைக்கும் நாமே காரணம் என்பதைச் சிந்திக்கும்போது நாம் செய்த நல்வினைகளால் நமக்கு நன்மையும், தீவினைகளால் நமக்குத் தீமையும் விளைகின்றன என்பதை உணரமுடிகின்றது.

செய்வானும், செய்வினையும், சேர்பயனும், சேர்ப்பவனும் உய்வான் உளன் என்றுணர் என்பது சாஸ்திர உண்மை. எக்கருமத்தையும் செய்பவனும், செய்யப்படும் கருமமும், அதனால் விளையும் பயனும், அப்பயனைச் செய்பவனுக்கே சேர்ப்பிக்கும் வல்லவனும் வேண்டும். அதன்படி கருமத்தைச் செய்பவர்களாகிய எமக்கு அதன் பயனாகிய நன்மை தீமைகளை இறைவனே சேர்ப்பிக்கின்றார். உழைப்பவனுக்கே ஊதியம் உரியது; அதுபோலச் செய்பவனுக்கே சேர்பயன் உரியது. ஆதலால் எமக்குத் துன்பம் வரும்போது நாம் செய்த தீவினைப் பயன்கள் அது என்பதை உணரவேண்டும்.

சூரபன்மன் சிவனை நோக்கித் தவம் செய்து 1008 அண்டங்களையும் 108 யுக காலம் ஆட்சி செய்யும் வரம் பெற்றான். தனது ஆட்சியில் தேவர்களைச் சொல்லொணாத் துன்பத்திற்கு ஆளாக்கினான். தேவலோகத்தைத் தீக்கிரையாக்கினான். தேவர்களைச் சிறையிட்டு வருத்தினான். தனக்குக் குற்றேவல் செய்யும்படி கொடுமைப்படுத்தினான். தேவர் தலைவனாகிய இந்திரன் முதலி





யோர் பிரமதேவனிடம் சென்று தம் குலத்திற்கேற்பட்ட துயரைக் கூறி முறையிட்டனர். அப்போது பிரமதேவன் அவர்களுக்குத் துன்பம் ஏற்பட்ட காரணத்தைச் சொன்னார்.

“முன்பொருகால் எனது மூத்த மகனாகிய தக்கன் தவவலிமையாலே தருக்குற்றுச் சிவனை மறந்து விஷ்ணுவை யாகத்தலைவனாக வைத்துச் செய்த யாகத்தில் அவனுக்குப் பயந்து நாமெல்லாம் பங்குபற்றி அவிப்பாகமும் உண்டோமல்லவா? சிவபெருமான் வீரபத்திரராக வந்து யாகத்தை அழித்துத் தக்கன் முதலானோரைத் தண்டித்தார். அதன் தொடர்ச்சிதான் இது, சிவனை மறந்து செய்த யாகமாகிய சிவநிந்தையில் பங்கு கொண்ட பாவம் தீரச் சிவபெருமானே சூரபன்மனைக் கொண்டு எம்மைத் தண்டிக்கின்றார்.

*பெற்றிடுங் குரவரானோர் பிள்ளைகள் தம்பால் நோயொன்*
*றுற்றிடில் பிறரைக் கொண்டும் உறுதுயர் செய்துதீர்ப்பர்*
*மற்றவர் தம்மேல் அன்போ வன்கணோ அதுபோல் நம்மைப்*
*பற்றிய பவங்கள் தீர்ப்பான் பரமனும் இனையசெய்தான்.*

பெற்றார்கள் பிள்ளைக்கு நோய்வந்தபோது அந்த நோயைத் தீர்ப்பதற்கு வைத்தியர் மூலம் மருந்து கொடுப்பர். அல்லது சத்திர சிகிச்சை செய்விப்பர். பிள்ளைக்கு மருந்து கசக்கும், சத்திர சிகிச்சையாலே தாங்க முடியாத நோ இருக்கும். பிள்ளை துன்பப்படும். பிள்ளை மீது கொண்ட வெறுப்பாலா இப்படி வருத்துகிறார்கள். இல்லை, பிள்ளை மீது கொண்ட அன்பே அது. சில நாளில் நோய் குணமாகி விடும். பிள்ளை சிரித்து விளையாடும், பெற்றார்க்கு நன்றி சொல்லும்.

அதுபோலத்தான் நாம் செய்த பாவம் தீரச் சிவபெருமானே சூரபன்மன் மூலம் எம்மைத் தண்டித்துத் திருத்துகின்றான் எனும் உண்மையையுணர்ந்து நாம் சிவபெருமானிடமே சென்று முறையிடுவோமெனத் தேவர்களைப் பிரமதேவன் வழிப்படுத்தினார் என்பது கந்தபுராணம் தரும் செய்தி.

ஆதலால் நமக்குற்ற துயர்க்கு நாமே காரணமென்பதுணர்ந்து நல்வினையையே செய்து நற்கதி அடைய முயல்வோமாக.

# எது பெரிது

சிறுவன் ஒருவன் நாவல் மரத்தில் நின்று நாவற்பழங்களைப் பறித்துத்தின்று கொண்டிருந்தான். அந்த வழியால் வந்த ஔவையார் "தம்பி! எனக்கும் நாவற்பழம் தருவாயா" என்று கேட்டார். "பாட்டி தாராளமாகத் தருகிறேன், உனக்குச் சுட்ட பழம் வேண்டுமா சுடாத பழம் வேண்டுமா" என்று கேட்டான். ஔவையாருக்கு ஆச்சரியமாக இருந்தது, நாவற்பழத்திலும் சுட்ட பழமா? இவன் என்ன செய்கிறான் என்று பார்ப்போம், என்று எண்ணிக் கொண்டு "தம்பி சுட்டபழம் போடு" என்றார்.

சிறுவன் பழங்களைப் பறித்து நிலத்தில் எறிந்தான். ஔவையார் அவற்றைப் பொறுக்கி எடுத்து மண்ணை ஊதியூதித்தின்றார். சிறுவன் "என்ன பாட்டி பழம் சுடுகிறதா" என்றான் கிண்டலாக. பாட்டி வெட்கிவிட்டார். 'கருங்காலிக் கட்டைக்கு நாணாத கோடாரி இருங்கதலித் தண்டுக்கு நாணும்' என்பது சரியாகப் போய்விட்டதே. என்னையே இவன் மடக்கி விட்டானே. இவன் சாதாரண சிறுவனாக இருக்க முடியாது, இவனிடத்து ஏதோ மறைபொருள் இருக்கிறது. எனத் துணிந்து "நீ யார் தம்பி" எனக் கேட்டார். "என்னைத் தெரியாதா" என்று முருகன் தன் உண்மைக் கோலத்தைக் காட்டினான். ஔவையார் பணிந்து வணங்கிப் பரவசமானார்.

ஔவையாரின் அரும்பெரும் அறிவுத்திறனை உலகிற்குக் காட்டவேண்டுமென நினைத்த முருகன் "ஔவையே! இந்த உலகிற் பெரியதெது?" என்று கேட்டான். ஔவை தமிழ்க் கிழவியல்லவா பாடியே விட்டாள்.

*"பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய் பெரிது பெரிது புவனம் பெரிது"*

இந்த உலகம் தான் எல்லாவற்றிலும் பெரிது *"புவனமோ நான்முகன் படைப்பு"* இந்த உலகைப் படைத்தவன் பிரமதேவன். அப்படியாயின் பிரமன்தான் பெரியவன். அதுவும் பொருந்தாது. *"நான்முகனோ கரியமால் உந்தி வந்தோன்"* பிரமதேவன் கரியதிருமாலின் உந்திக் கமலத்தில் இருந்து தோன்றியவன் ஆதலால் திருமாலே பெரியர். அதுவும் சரியல்ல; *"கரியமாலோ அலைகடல் துயின்றோன்"* ஆதலால் திருமால் பள்ளி கொள்ளும் திருப்பாற்கடலே பெரியது. *"அலைகடல், குறுமுனி அங்கையில் அடக்கம்"*; அந்த அலைகடலோ குறுமுனியாகிய அகத்திய





முனிவரின் கையில் ஒரு காலத்தில் அடங்கி இருந்தது. ஆதலால் அகத்தியமுனிவரே பெரியவர். ஆனால் *"குறுமுனியோ கலசத்தில் பிறந்தோன்"*; ஆதலால் குறுமுனியை விடக் கலசமே பெரிது. *"கலசமோ இப்புவியின் சிறுமண்"* ஒருதுளி மண்ணில் தோன்றிய கலசத்தைவிட இந்த மண்ணுலகே பெரிது. *"இப்புவியோ ஆதிசேடன் ஒருதலைப்பாரம்"* ஆதலால் தன் ஆயிரம் தலைகளில் ஒரு தலையில் இப்புவியைத் தாங்கும் ஆதிசேடனே பெரியன். *"ஆதிசேடனோ உமையவள் சிறுவிரல் மோதிரம்"* ஆதலால் அவனை மோதிரமாகக் கொண்ட உமையே பெரியர். *"உமையோ இறைவர் தம் உள்ளத் தொடுக்கம்"*; ஆதலால் இறைவனே பெரியர்; *"இறைவனோ தொண்டர்தம் உள்ளத்தொடுக்கம்"* ஆதலால் இறைவனையும் தம் உள்ளத்துள் வைத்திருக்கும் *"தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே"* ஆகவே சொல்லுதற்கரிய பெருமைக்குரிய பெரியர் தொண்டரே என்றார்.

சிவபெருமானிடம் எதையும் கேட்காத இயல்பினரான மாணிக்கவாசக சுவாமிகள்" வேண்டும் பரிசொன்றுண்டென்னில் அதுவும் உன்றன் விருப்பன்றே" என்பர். அப்படிப்பட்டவர் கூட சிவபெருமானிடம் தான் இருக்க ஒரு இடம் கேட்கின்றார்.

'சிவபெருமானே சக்தியாகிய உமாதேவியார் உங்களுக்குள் இருக்கின்றாள். சிவமாகிய நீங்கள் சக்திக்கு உள்ளே இருக்கிறீர்கள். சிவமும் சக்தியுமாகிய நீங்கள் இருவரும் சேர்ந்து என்னுள்ளத்துள் இருக்கிறீர்கள். அப்படியாயின் நான் இருப்பதற்கும் ஒரு இடம் வேண்டுமல்லவா? நான் அடியார்க்கு நடுவில் இருக்கும் அருளைத் தர வேண்டும்' என்கிறார்.

*உடையாள் உன்றன் நடுவிருக்கும் உடையாள் நடுவுள் நீ இருத்தி*
*அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பதானால் அடியேன் உன்*
*அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய் பொன்னம்பலத்தெம்*
*முடியா முதலே என்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே*

என்பது மணிவாசகர் திருவாசகம்.

ஆதலால் சிவனடியார்களே செயற்கரிய செய்யும்பெரியவர்களாவர் அவர் பெருமையே உலகிற் பெரியது, என்றுணர்ந்து, நாமும் சிவதொண்டு செய்து சிவகதி பெற முயல்வோமாக.

இதோர் பாடல்:

*பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்*
*பெரிது பெரிது புவனம் பெரிது*
*புவனமோ நான்முகன் படைப்பு*
*நான்முகனோ கரியமால் உந்திவந்தோன்*
*கரியமாலோ அலைகடல் துயின்றோன்*
*அலைகடல் குறுமுனி அங்கையில் அடக்கம்*
*குறுமுனியோ கலசத்தில் பிறந்தோன்*
*கலசமோ இப்புவியில் சிறுதுளிமண்*
*புவியோ ஆதிசேடனின் ஒருதலைப்பாரம்*
*ஆதிசேடனோ உமையவள் சிறுவிரல் மோதிரம்*
*உமையோ இறைவர்தம் உள்ளத் தொடுக்கம்*
*இறைவனோ தொண்டர்தம் உள்ளத்தொடுக்கம்*
*தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே.*

சிவதொண்டர்களாக இருப்பதிலும் பார்க்கப் பெருமையானது இவ்வுலகில் எதுவுமில்லை என்பதை நால்வர் பெருமக்களும் எமக்கு உணர்த்தியுள்ளனர்.

பிராமண குலத்தில் பிறந்து அரசமாளிகையில் வளர்ந்தவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள். அவர் அந்தணர் ஒழுக்கமும் அரசபோகமும் பெற்ற பெருமைக்குரியவர். சிவபெருமானுடன் தோழமை உறவு கொண்டவர். தம்பிரான் தோழன் எனப் பெயர் பெற்றவர். அப்படிப்பட்ட பெருமைக்குரிய சுந்தரர் தான் பாடிய திருத்தொண்டத் தொகையில் "*தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்*" எனத் தொடங்கி "*அப்பாலும் அடிசார்ந்த அடியார்க்கும் அடியேன்*" எனக்கூறிச் சகல சிவனடியார்க்கும் அடியேன் அடியேன் என்று பாடுகின்றார் என்றால் சிவதொண்டர் பெருமைதான் என்னே.



# கவிதைக் கற்போவியம்

தமிழிலக்கியப் பரப்பில் காப்பியங்கள் சிற்றிலக்கியங்கள் மட்டுமன்றி தனிப்பாடல்களும் பல சுவையான இலக்கியங்களாக விளங்குகின்றன.

இலக்கியங்களிற் கற்புப் பற்றிச் சொல்லாதவையே இல்லையெனலாம். சங்க இலக்கியங்கள் தொடக்கம் இக்காலப் புதுக் கவிதைகள் வரை கற்பு பாடுபொருளாக இருந்து வருகிறது. இன்னும் இருக்கும்.

கற்பு பெண்களுக்கு மட்டும் தான் வேண்டியதா, ஆண்களுக்கும் வேண்டுமா என்று அன்றுமுதல் இன்று வரை வாதிட்டுக் கொண்டே இருக்கிறார்கள். பெரும்பாலும் பெண்களின் உடலுடன் சம்பந்தப்படுத்திப் பெண்களுக்கே கற்பு உரியது என்று எண்ணுவோரையே அதிகம் காணலாம்.

கற்பு ஆண் பெண் இருவர்க்கும் உரியது என்பதற்கோர் தனிப்பாடல்

கவிதையுலகில் வேதநாயகம்பிள்ளை அவர்கள் நன்கு அறியப்பட்டவர். அவரது தனிப்பாடல்கள் பல பிரபலமானவை. அதில் ஒரு பாடல்; நாலு வரிகள் மட்டும் உடையது. அதில் ஒரு செய்தி தருகிறார்.

ஒரு காதலன் தன் தேவியை அழைத்துத் தான் வரைந்த ஓவியத்தைப் பார்க்கச் சொல்கின்றான். அவளோ அது ஆணுடையதென்றால் நான் பாரேன் பெண்ணுடையதென்றால் நீர் பார்க்கக் கூடாதென்கிறாள். அவ்வளவுதான் செய்தி

ஆனால் இந்தக் கற்பனைச் செய்தி கவியுள்ளத்தில் ஊற்றெடுத்து அவர் கவி சொல்லும் நாடகப் பாங்கில், செய்யுள் அமைப்பில் எம்மையும் கற்பனையுலகில் சஞ்சரித்து மெய்மறந்து மகிழச் செய்கிறது. பாடல் இதோ

*"ஓவியர் நீள் சுவரெழுதும் ஓவியத்தைக் கண்ணுறுவான்*
*தேவியை யான் அழைத்திட ஆண்சித்திர மேல் பாரேன்*
*பாவையர்தம் உருவமெனில் நீபார்க்க மனம் பொறேனென்றாள்*
*காவிவிழி மங்கையிவள் கற்புவெற்பின் வற்புளதால்"*

இந்தப் பாடலைப் படித்ததும் எங்களின் கற்பனையில் ஒரு கதையே பிறக்கிறது.

மணம் முடித்த இளங்காதலர் இருவர். அவன் ஓவியக்கலைஞன், அவள் அவனுடைய கற்பனைக்கு வளம் சேர்க்கும் அழகு மகள். ஓவியன் அல்லவா அவன் தன்னுடைய ஓவியத்திறனை அவளுக்குக் காட்டி அவளை மகிழவைத்து அவள் பாராட்டைப் பெற விரும்புகிறான். அவனது வீட்டுச் சுவர் ஓவியம் வரையும் நீள் சுவர். அதிலே தன் தேவியின் எழிற் கோலத்தை உயிர்த்துடிப்புடன் வரைந்து பார்க்கிறான். அவனுக்கே நம்ப முடியாத உயிரோவியமாகத் தெரிகிறது. அதை அவளுக்குக் காட்டி மகிழ வேண்டுமென்ற தவிப்புடன் "தேவி" என அழைத்தபடி அவள் இருக்குமிடம் தேடிச்செல்கிறான்.

அவளோ காதலனின் நாவிற்கினிய சுவையான உணவு தயாரிப்பதில் தன்கைவண்ணத்தைக் காட்டிக் கொண்டிருக்கிறாள். சென்றவன் அவசர அவசரமாக 'தேவி நான் ஓர் அழகிய ஓவியம் வரைந்துள்ளேன் வந்து பார்" என்கின்றான். அவளுக்கும் பார்க்க ஆவல்தான் எனினும் அதை வெளிக்காட்டாமல் அது யாருடைய ஓவியம் எனக் கேட்கிறாள்.

அவளை ஆச்சரியத்தில் ஆழ்த்தி மகிழ விரும்பிய ஓவியன் 'அது ஒரு அழகான ஆணின் ஓவியம், அந்த ஆணழகை வந்து பார்' என்கிறான். அவளோ அவன் சற்றும் எதிர்பாரா விதத்தில் "ஆண் சித்திரமேல்யான் பாரேன்" எனக்குரிய ஆணழகன் நீதான், ஆதலால் உன்னையன்றிப் பிற ஆடவரை மட்டுமல்ல ஆடவர் ஓவியத்தையே பாரேன் என்று சொல்லித் திரும்பி விடுகிறாள்.

ஓவியனுக்கு அவளை ஏமாற்றிவிட்டதாகப் பெரிய மகிழ்ச்சி. "தேவி பார்த்தாயா உன்னை ஏமாற்றிவிட்டேன்; பெண்களுக்கேயுரிய அவசரபுத்தியால் நீ ஏமாந்து விட்டாய். வந்து பார் அது ஆணினுடைய ஓவியமல்ல அழகான பெண்ணின் ஓவியம்" என்கிறான். உடனே அவள் அவனுடைய கையைப் பிடித்துத் தன் பின்னே தள்ளி விட்டு "பாவையர்தம் உருவமெனில் நீ பார்க்க மனம் பொறேன்" என்னைத் தவிர வேறெந்தப் பெண்ணையும் நீ பார்க்கக் கூடாது. உன்னிலில்லா ஆணழகு எனக்கு வேண்டாம். என்னிலில்





லாத பெண்ணழகு உனக்கு வேண்டாம். ஆதலால் இருவருமே இந்த ஓவியத்தைப் பார்க்க வேண்டாம். உனக்கு நான், எனக்கு நீ, என்று கூறி எழில் தவழ அவனருகில் நிற்கின்றாள்.

ஓவியன் திகைத்துப் போகின்றான். இத்தனை உறுதியான இலட்சியப் பெண்ணா இவள். இவளைக் காதலியாகப் பெற்ற நான் பாக்கியசாலியென்று உவகை உணர்ச்சியின் உச்சியில் நின்று வியக்கின்றான். மறுகணம் அவள் கையை இறுகப் பற்றுகின்றான்.

'பெண்ணே நீ அந்த ஓவியத்தைப் பார்க்கத்தான் வேண்டும். என்னுள்ளத்தில் அழகு ஒழுக நான் எழுதிப் பார்க்கும் ஓவியத்தைப் பார்க்கத்தான் வேண்டு' மென்று திரையை விலக்குகின்றான். கடைக் கண்ணால் பார்த்தவள் தன் உருவையே அங்கு கண்டு வெட்கத்தால் நாணி அவன் மார்பில் தலை புதைக்கின்றாள்.

இங்கு ஒரு நாடகக் காட்சியை, கற்பனை வளம் மிக்க உயிர்த்துடிப்புள்ள சுவையான உரையாடலைக் காண்கின்றோம். மீண்டும் கவிதையைப் பாருங்கள். கதையின் நாயகனே சொல்கின்றான்.

*"ஓவியர்நீள் சுவரெழுதும் ஓவியத்தைக் கண்ணுறுவான்*
*தேவியை யான் அழைத்தி* ................................

என்றதும், அழைக்கப்பட்ட அவன் தேவி கவிதை வரியைத் தொடர்கிறாள்.

*"ஆண்சித்திரமேல் யான் பாரேன்........."* என்கிறாள். ஓவியன் மௌனமாகின்றான். அவளே தொடர்கிறாள்.

"பாவையர்தம் உருவமெனில் நீ பார்க்க மனம் பொறேன்" நீ பார்க்கக் கூடாது என்றாலும் பரவாயில்லை "நீ பார்க்க மனம் பொறேன் என்றாள். ஓவியன் என்ன சொல்லமுடியும். இருவருமே ஒருவரையொருவர் பார்த்தபடி சிலையாக நிற்கிறார்கள்.

இப்பொழுது கவிஞர் அவர்களைப் பார்த்து அவர்களின் கற்புறுதியை கவிக்கூற்றாக எமக்குச் சொல்கிறார்.

"காவி விழி மங்கை இவள் கற்புவெற்பின் வற்புளதால்" இவள் தன் பார்வையாலேயே கற்பை உணர்த்திவிட்டாளே. இவளின்

கற்பு மலை போன்ற திண்மையுடையது என்கிறார். கற்பிற்கு மலையை உவமையாக்கக் காரணம் என்ன?

மலை *"அளக்கலாகா அளவும், பொருளும்,*
*துளக்கலாகா நிலையும், தோற்றமும்*
*றெப்பினும் வளந்தரும் வண்மையும்*

உடையது. கற்பொழுக்கத்திற்கும் அத்தனை பெருமையுமுள.

திருவள்ளுவப் பெருமான் பெண், தன் கற்பை மட்டுமல்ல ஆணின் கற்பையும் காத்துக் குடும்பத்தின் பெருமையைக் காக்கும் பேராற்றல் படைத்தவள் எனக் கூறுகின்றார்.

*"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற*
*சொற்காத்துச் சோர்விலாள் பெண்"*

என அவர்காட்டும் பெருந்தக்க பெண்ணை இங்கு காண்கின்றோம்.

"ஆண்சித்திரமேல் யான் பாரேன்" எனத் தற்காத்து "பாவையர்தம் உருவமெனில் நீ பார்க்க மனம் பொறேன்" என்று தற்கொண்டாற் பேணி, "கற்பு வெற்பின் வற்பு உளதால்" எனக் கவிஞர் போற்றும் "தகை சான்ற சொற்காத்துச் சோர்விலாப் பெண்ணாக" அவளைக் காட்டும் வேதநாயகம் பிள்ளையின் தனிப் பாடலை மீண்டும் படித்து நயக்கத்தானே வேண்டும்.

*ஓவியர் நீள் சுவரெழுதும் ஓவியத்தைக் கண்ணுறுவான்*
*தேவியை யான் அழைத்திட ஆண்சித்திரமேல் யான் பாரேன்*
*பாவையர்தம் உருவமெனில் நீ பார்க்க மனம் பொறேன் என்றாள்*
*காவிவிழி மங்கை இவள் கற்பு வெற்பின் வற்புளதால்*



# இளங்கோ திருமுகம்

**பாவடிகள் தேன்வடியப்பாடும் இளங்கோவடிகள் படைத்த நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்ற மணியாரத்திலிருந்து அழகிய ஒரு மணியைப் பார்ப்போம்.**

காதலனைப் பிரிந்த காதலி பிரிவாற்றாமையால் வருந்தித் தன் காதலனுக்கு வரைந்தனுப்பிய திருமுக ஓலையை அக்காதலன் தன்னைப் பிரிந்து துயருற்றிருக்கும் தந்தை தாயர்க்கு அனுப்பினான் என்றால் அது நம்ப முடியாத, அதிசய மான செய்தியல்லவா. அதிசயம், ஆனால் உண்மை; நம்பலாம் இதோ! சிலப்பதிகாரத்தில் ஒரு காட்சி:

பூம்புகாரில் பெருவணிகன் மாசாத்துவான் மகன் கோவலனுக்கும் பெருநிதிக் கிழவன் மாநாய்க்கன் மகள் கண்ணகிக்கும், இவ்வுலகு இதுவரையறியாச் செல்வச் செழிப்பு மிக்க திருமண விழா நடைபெறுகிறது. கற்பு நெறி தழைக்க மணவாழ்வு இனிதே தொடர்கிறது.

கலைஞனான கோவலன் ஒருநாள் கணிகையர்குல ஆடல் அழகி மாதவியின் அரங்கேற்றம் காணச் செல்கின்றான். மாதவியின் ஆடற் கலையின் அற்புதம் கண்டு தன்னை மறந்து சந்தர்ப்ப வசத்தால் மாதவியிடம் மனதைப் பறிகொடுத்து அவளுடனே வாழத் தொடங்குகின்றான். கண்ணகியை மறந்து விடுகிறான்.

கலையுலக வாழ்வில் இந்த உலகையே மறந்து கோவலனும் மாதவியும் ஆடியும் பாடியும் களித்து மகிழ்ந்திருந்தார்கள். கண்ணகியோ கணவர் வருவார் வருவாரெனக் காலங்கடத்தித் தன் நலமெலாம் இழந்து காத்திருக்கிறாள். கண்ணகி வீட்டுச் செல்வ மெல்லாம் கோவலன் மாதவி இன்பக்களிப்பில் கரைந்து விடுகின்றன.

ஒருநாள்; இந்திர விழாக்காலம்; காவிரிப்பூம்பட்டினக் கடற் கரையில் கோவலனும் மாதவியும் யாழ் மீட்டிப் பாடிக்களித்திருக்கும் வேளையில், விளையாட்டாக ஊடலிற் பாடிய கானல் வரிப்பாடல் ஒன்று மாதவி மீது கோவலனுக்குச் சந்தேகத்தையுண்டாக்கி

விடுகிறது. இவள் கணிகைதானே, வேறும் யாரோ ஒருவனை விரும்புகிறாள் என ஐயுற்று அவ்விடம் விட்டகல்கிறான். கண்ணகியின் எண்ணம் வருகிறது, கண்ணகியிடம் செல்கிறான்.

வாடித்தனித்திருந்த கண்ணகி கோவலன் வரவு கண்டு முகம் கறுக்காமல் வரவேற்கிறாள். கைப்பொருளெலாமிழந்து வந்த கோவலன் செய்வதறியாது திகைத்து நிற்கிறான். குறிப்பாலுணர்ந்த கண்ணகி "காற்சிலம்பு உளது கொள்மின்" எனத் தன் காற்சிலம்பை விற்றுப் பொருள் தேட வழி சொல்கிறாள். மதுரை மாநகர்க்குச் சென்று சிலம்பை விற்று வாணிகம் செய்யவென இரவோடிரவாகக் கால் நடையாகவே இருவரும் காட்டுவழியே செல்கின்றனர்.

கோவலன் பிரிவைத் தாங்க மாட்டாத மாதவி வருந்தித் துடிக்கிறாள். கோவலன் கண்ணகியோடு இருவோடிரவாக ஊரைவிட்டுச் சென்ற செய்தியறிந்து வருந்தித் தான் செய்த பிழையைப் பொறுத்துத் தன் துயர் தீர்க்க வேண்டுமென ஓலையொன்று வரைந்து கோசிகன் என்பானிடம் கொடுத்தனுப்புகின்றாள்.

கோவலனைத் தேடிச் சென்ற கோசிகன், வழிநடையாற் களைத்து ஒரு குருக்கத்தி மலர்ப்பந்தற்கீழ் கண்ணகியுடன் அமர்ந்திருந்த கோவலனைக் காண்கின்றான். மகனைப் பிரிந்த தந்தை தாயார் பெருந்துயர்க் கடலில் மூழ்கியிருப்பதையும், புகார் நகரே சோகமாயிருப்பதையும் கூறி, மாதவியின் துயரையும் கூறி மாதவி தந்த ஓலையைக் கோவலன் கையில் கோசிகன் கொடுக்கின்றான்.

அந்த ஓலையில் மாதவி கூந்தலின் நறுநெய் மணங்கமழ அதிற்பழக்கப்பட்ட கோவலன், ஓலையை வாங்கிப் படிக்கிறான்.

*உடன் உறைகாலத்து உரைத்த நெய்வாசம்*
*சிறு நெறிக் கூந்தல் மண்பொறி உணர்த்தக் காட்டியது*
*ஆதலின், கைவிடலீயான ஏட்டு அகம் விரித்து*
*ஆங்கு எய்தியது உணர..........*





ஓலையைப் படிக்கிறான்

*அடிகள் முன்னர்யான் அடிவீழ்ந்தேன்*
*வடியாக் கிளவி மனக்கொளல் வேண்டும்*
*குரவர் பணி அன்றியும் குலப்பிறப்பு ஆட்டியொடு*
*இரவிடை கழிதற்கு என்பிழைப்பு அறியாது*
*கையறு நெஞ்சம் கடியல் வேண்டும்.*
*பொய்தீர் காட்சிப் புரையோய் போற்றி'*

என்ற ஓலையின் பொருளை உணர்கின்றான்.

*"அடிகள் முன்னர் யான் அடிவீழ்ந்தேன்*
*வடியாக்கிளவி மனக்கொளல் வேண்டும்."*

பெருந்தகையீர் தங்கள் திருவடிகளில் வீழ்ந்து வணங்குகின்றேன். என் தெளிவற்ற சொற்களுக்கு மனம் இரங்க வேண்டும்;

*குரவர்பணி அன்றியும் குலப்பிறப்பு ஆட்டியொடு*
*இரவிடைகழிதற்கு என்பிழைப்பு அறியாது*
*கையறு நெஞ்சம் கடியல் வேண்டும்.*

பெற்றார்க்கு உடனிருந்து செய்ய வேண்டிய தொண்டினையும் மறந்து, கற்புடைக்குல மகளாகிய கண்ணகியோடு நீங்கள், இரவோடிரவாக ஊரைவிட்டுச் செல்வதற்கு, நான் செய்த தவறு இன்னதெனத்தெரியாது செயலற்றிருக்கும் என்துயரைப் போக்குதல் வேண்டும்.

*"பொய்தீர் காட்சிப் புரையோய் போற்றி"*

உண்மையைக் கண்டறியவல்ல நுண்ணறிவுடைய பெருந்தகையீர் தங்களை வணங்குகிறேன். என்று

*அவள் எழுதிய இசைமொழியுணர்ந்து*
*தன்தீது இலள் எனத்தளர்ச்சி நீங்கி*
*என்மீது என்றே எய்தியதுணர்ந்து*

செய்வதெதுவெனச் சிந்திக்கின்றான். இருமுது குரவராய பெற்றார்க்கும் சொல்லாமல், பிரிந்து வந்ததால் அவர்கள் படும் துயர்பற்றிக் கோசிகன் சொல்லிய செய்தி மனதை வருத்துகிறது. மாதவியின் ஓலையை மீண்டும் படிக்கிறான்.

கோவலன் நுண்மதியில் ஓர் எண்ணம் தோன்றுகிறது, என் பெற்றாருக்கு நான் எழுதும் ஓலைபோலவே இதன் பொருள் அமைந்துள்ளது. ஆதலால் இதையவர்க்கே அனுப்பலாமெனத் துணிகின்றான். இதன் பொருளின் பொருத்தப்பாட்டை மீண்டும் சிந்திக்கின்றான்.

*"அடிகள் முன்னர்யான் அடிவீழ்ந்தேன்*
*வடியாக்கிளவி மனக்கொளல் வேண்டும்"*

என்பெரும் பெற்றோரே, உங்கள் மலரடிகளில் நான் விழுந்து வணங்குகின்றேன். என் தெளிவற்ற செய்தி கேட்டு நீங்கள் மனம் இரங்க வேண்டும்.

*குரவர் பணியன்றியும் குலப்பிறப்பாட்டியோடு*
*இரவிடைக் கழிதற்கு என்பிழைப்பு அறியாது*
*கையறு நெஞ்சம் கடிதல் வேண்டும்*

இருமுதுகுரவராகிய தங்களுக்கு நான் செய்யவேண்டிய பணிவிடைகளையும் மறந்து, என்மனையாளோடு உங்களுக்கும் சொல்லாமல் இரவிரவாகப் புறப்பட்டு வந்த என் தவறுக்கு வருந்துகின்றேன். என்னுள்ளம் செய்வதறியாது செயலற்று வாடுகிறது. என்னைப் பொறுத்தருள்வீர்,

*பொய்த்தீர் காட்சிப் புரையோய் போற்றி*

பொய்தீர்ந்த, உண்மையை உணரும் உயர்குணமுடைய என் பெற்றோரே உங்களை வணங்குகின்றேன்.

எனும் பொருளமைதி தெளிந்து கோசிகனிடம் அந்த ஓலையைக் கொடுத்து

*எற்பயந்தோற்கு இம்மண்ணுடை முடங்கல்*
*பொற்புடைத்தாகப் பொருள் உரை பொருந்தியது*
*மாசில் குரவர் மலரடி தொழுதேன்.*

கோசிகனே, இந்த ஓலையைக் கொண்டுபோய் நான் தந்ததாகச் சொல்லி என் பெற்றார் கையில் கொடுவென்கின்றான்.

தென்னூற்ற தமிழமுதின் சுவைகண்ட கோசிகன் வியப்புற்று வணங்கிவிட்டு ஓலையை வாங்கிச் செல்கின்றான்.

காதலி குறையிரந்து காதலனுக்கு வரைந்த திருமுக ஓலை, மகன் குறையிரந்து பெற்றார்க்கெழுதியதாகிய பொருத்தப்பாட்டை வியவாதிருக்க முடியுமா.

சிலப்பதிகாரம் தமிழர் கதை சொல்வது. முடிகெழுவேந்தர் மூவர்க்குமுரிய தமிழ்நாட்டின் பண்பாடுகளைப் பொய்யின்றிப் புனைந்துரையின்றி வழுவின்றி உள்ளபடி உண்மையாகத் தமிழுயிர்த் துடிப்புடன் சொல்வது. காலத்தால் அழியாதது. கலைநுட்பமெல்லாம் தேக்கி வைத்த களஞ்சியம் அது.

சிலப்பதிகாரத்தைத் தந்த இளங்கோவடிகளைப் "பாவடிகள் தேன்வடியப்பாடும் இளங்கோவடிகள்" என்று வாயாரப் போற்றாதிருக்க முடியுமா.



# யாவரும் கேளிர்

இன்று நந்தமிழர் உலகின் பலபாகங்களிலும் புலம் பெயர்ந்து வாழ்கின்றார்கள். புலம் பெயரக் காரணம் துன்பத்துக்குரியது தான் எனினும் புலம் பெயர்ந்தோர் தாம் வாழும் நாடுகளில் எப்படி அமைதி காணவேண்டும்; அவர்கள் மட்டுமல்ல இங்கிருப்போரும் எப்படி அமைதி பெற்று வாழ வேண்டும் எனச் சங்க இலக்கியம் ஏதாவது சொல்கிறதா எனப் பார்ப்போம்.

சங்க காலப் புலவர்களில் ஒருவர் கணியன் பூங்குன்றனார். இப்போது தமிழ்நாடு இராமநாதபுர மாவட்டத்தைச் சேர்ந்த மகிபாலன்பட்டி எனும் ஊர் சங்க காலத்தில் பூங்குன்றம் என வழங்கிற்று. இவருக்கு இயற்பெயர் கணியன் என்பது. அவ்வூரில் பெருமைக்குரிய சான்றோர் இவராதலால் கணியன் பூங்குன்றனார் எனப் பெயர் நிலைப்பதாயிற்று.

இவர் இன்பம் துன்பம் எதுவாயினும் கலங்காது வாழ்ந்தவர். யாரையும் பாராட்டுவதுமில்லை; இகழ்வதுமில்லை; பெரியோரைப் புகழ்வதுமில்லை. சிறியோரைப் புறக்கணிப்பதுமில்லை. நல்லிசைப் புலமை மிக்கவராகிய இவர் எந்த வேந்தரையோ வள்ளல்களையோ பாடியதுமில்லை. இவரைப் பார்க்க ஏனைய புலவர்களுக்கு வியப்பாயிருந்தது. அவர்கள் இவரையே பார்த்துப் "பாடுபெறு சான்றோராகிய நீங்கள் யாரையும் பாடாமை என்னையோ" என்று கேட்டனர். அதற்கு அவர் சொல்லிய பதில் ஒரு பாடல்; அது சங்கப் பாடல்களுக்கே தலை மணியானது.

முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற்ற போது அதன் இலட்சிய வாசகமாக "யாதும் ஊரே யாவரும் கேளிர்" எனும் தொடர் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்தகைய உயரிய மனித ஒருமைப்பாட்டு இலட்சியம் தமிழில் உண்டா என உலகம் வியந்தது. அது தான் கணியன் பூங்குன்றனாரின் பாடல் தொடக்கம். இதோ பாடல்

*"யாதும் ஊரே யாவரும் கேளிர்"*

எமக்கு எல்லாம் ஊர்தான் எல்லோரும் எம் சுற்றத்தவரே

"தீதும் நன்றும் பிறர்தர வாரா"

கேடும் ஆக்கமும் தன்னாலே வருவனவன்றிப் பிறரால் வருவனவல்ல

"நோதலும் தணிதலும் அவற்றோரன்ன"

நோதல் உண்டாதலும் அது தணிதலும் அதே போன்றதுதான்.

"சாதலும் புதுவதன்றே"

சாதலும் புதியதல்ல அது கருவுற்ற நாளிலிருந்தேயுள்ளது.

"வாழ்தல் இனிதென மகிழ்ந்தன்று மிலமே
முனிவின் இன்னா தென்றலு மிலமே"

வாழ்வை இனியதென்று மகிழ்வதுமில்லை இன்னாத தென்று இகழ்வதும் வெறுப்பதுமில்லை.

மின்னொடு வானம் தண்துளி தலைஇ யானாது
கல்பொருதிரங்கு மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோ லாருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியில் தெளிந்தனம்

மின்னி இடியிடித்து வான்வழி செய்யும் மழை நீர் ஆறாகி ஓடுகையில் அந்த நீர் வழிச் செல்லும் மிதவை போல உயிர் ஊழின் வழியே செல்லும் என்பதை அறிஞர் வாயிலாக அறிந்தோம்.

ஆதலின் மாட்சியில் பெரியோரை வியத்தலு மிலமே
சிறியோரை இகழ்தல் அதனினு மிலமே"

ஆதலால் நாம் பெரியோரைப் போற்றுதலும் இல்லைச் சிறியோரைத் தூற்றுதலுமில்லை.

இந்தப் பாடல் பாடாண்திணை, செவியறிவுறூஉ துறை. இதன் உட்பொருள் மனித வாழ்வுக்கு எவ்வளவு உயர்வானது. இன மத சாதி மொழி பேதங்களை மறந்து மக்கள் யாவரும் எம் உறவினரே எனக் கொள்ளும்போது அவர் வாழும் இடம் எல்லாம் எம் ஊரேயாகும். அதனால் "யாதும் ஊரே": என்றார்.

"இந்த உலகில் சாந்தியும் சமாதானமும் நிலை வேண்டும். சமாதானத்துக்காகவே போர்; உலக சமாதானத்துக்காகவே அணு வாயுத உற்பத்தி" என்று தடுமாறும் இன்றைய உலகிற்கு சங்கச் சான்றோர் அன்றே கூறிய மனித ஒருமைப்பாட்டுச் சிந்தனையை எண்ணி வியக்காதிருக்க முடியாது.

மனித குலம் முழுவதற்கும் வேண்டிய மூலமந்திரமாகக்





கொள்ளப்பட வேண்டியது "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பது யாவரும் கேளீர் அல்ல யாவரும் கேளிர். கேளிர் என்றால் சுற்றத்தார். மனித குலம் இதனையுணர்ந்து கொள்ளுமானால் பகையும் போரும், கொள்ளையும் கொலையும் இந்த உலகை விட்டு விலகி விடும்.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற மனநிலை வரவேண்டுமானால் முதலில் இவ்வுலகின் நிலையாமையையும் அதனூடு பெறக்கூடிய நிலையான அறிவினையும் அறிந்து கொள்ள வேண்டும். அதில் முதலாவது தீதும் நன்றும் பிறர்தரவாரா என்பதுணர்தல்.

"ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும்" எனும் இவ்வுண்மையைச் சிலப்பதிகாரக்கதை எமக்குணர்த்துகின்றது. கோவலன் பொற்கொல்லனால் வஞ்சிக்கப்பட்டு, பாண்டிய மன்னனால் கொலைக் குற்றம் சுமத்தப்பட்டுத் தலை வெட்டப்படுகின்றான். செய்யாத குற்றத்திற்காகச் சிரச் சேதமா எனக் கண்ணகி கொதித்தெழுந்து மதுரை மாநகரைத் தீக்கிரையாக்குகிறாள். ஈற்றில் கோவலனின் முற்பிறப்பில் வழிப்போக்கன் ஒருவனைக் கொன்று அவன் பொருளைக் கவர்ந்த பழியாலேதான் இப்பிறப்பில் செய்யாத களவுக்காகப் பழிசுமந்து கொலையுண்டான் எனும் செய்தி தெரிய வருகிறது. ஆதலால் நன்றும் தீதும் பிறரால் வாரா, தன்னால் தானே வரும், என்பது உணர்த்தப்படுகிறது.

விடிந்தால் இராமனுக்கு முடிசூட்டுவிழா; நடுநிசியில் சிற்றன்னை கைகேயி இராமனையழைத்து "உன்தம்பி பரதன் முடிசூடுவான் நீ பதினான்கு வருடம் வனவாசம் செய்ய வேண்டுமென்பது உன் தந்தை தசரதர் கட்டளை." என்கிறாள். இராமனோ "எந்தையே ஏவ நீயே உரை செய்ய இயைவதுண்டேல் உய்ந்தனன்.....செல்கின்றேன் விடையுங் கொண்டேன்" என்று கூறி மரவுரி தரித்து "சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை" போன்ற முகத்துடன் வனவாசம் செல்கின்றான்.

வாழ்தல் இனிதென மகிழ்தன்று, நோதலும் தணிதலும், சாதலும் புதுவதன்று, நீர்வழிப்படும் புணைபோல உயிர் விதிவழிச் செல்லும் என்பதையுணர வைக்கின்றார்.

இந்த உண்மையை உணர்ந்து கொண்டால், பிறரில் குறை கண்டு பழிதூற்றுவதை விட்டு நமக்கு வரும் கேடும் ஆக்கமும் நம்மால் வந்தவையே, பிறர் கருவியேயன்றி நாமே காரணர்களென்னும் உண்மை புரியும்; மனிதநேய ஒருமைப்பாடு உருவாகும்.

# தடுமாறாத சைவம்

*"சைவத்தின் மேற் சமயம் வேறில்லை அதிற்சார் சிவமாம்*
*தெய்வத்தின் மேற்தெய்வம் இல்....."*

என்பது அருளாளர் வாக்கு. மாணிக்கவாசக சுவாமிகள் சொல்வது போன்று

*"மிண்டிய மாயாவாதம் என்னும்*
*சண்டமாருதம் சுழித்தடித்து ஆர்த்து*
*உலோகாயதம் எனும் ஒண்திறற் பாம்பின்*
*கலாபேதத்த கடுவிடம் எய்தி......"*

இருக்கும் இன்றைய உலகில் அநாதியான உண்மைகள் மறைக்கப் பட்டு மறக்கப்படுகின்றன. பொய்மைகள் புதுமெருகிட்டு முன் எடுக்கப் படுகின்றன.

சக்தியும் சிவமுமாய பரம் பொருளின் அருவுருவாகிய சிவலிங்க வழிபாடு அநாதியானது; அகிலமும் நிலைபெற்றது. அவ்வித உண்மைச் சிவ வழிபாட்டை மறந்து புதிய புதிய தெய்வங் களை உருவாக்கிச் சைவத்தின் உருவழித்து எம்மக்கள் எவரை வணங்குவது, எப்படி வணங்குவது, எவரை எப்படி வணங்கினால் கைமேல் பலன் கிடைக்கும் என்று தடுமாறும் காலம் இது.

அதிலும் தமிழர்களாகிய சைவசமயத்தவரின் நிலை மிக அவலமானது. தங்களின் உண்மையான இருப்பினை அறியாமல் தங்கள் மூலம் எதுவென அறியாமல் தடுமாறுகிறார்கள். தன் சொந்தத் தாயின் உண்மை அழகை உணரமுடியாத மூடன் பிறர்தாயின் போலி அழகில் மயங்கி தன் தாயை மறந்து மாற்றான் தாயின் பின் செல்வது போன்ற சிறுமை எம்மத்தியிற் குடி கொண்டு விட்டது. உலோகாயதத்தின் கோலம் இது.

*"பெருமைக்கும், நுண்மைக்கும், பேரருட்கும், பேற்றின்*
*அருமைக்கும் ஒப்பிலாதான்"*

ஆகிய சிவனை மறக்கும், அவனைப் பின் தள்ளும் மாயாவாத மயக்கம் இது. இந்த மயக்கத்தைப் போக்கி நம்மவரை விழிப்படையச்





செய்ய வேண்டியது காலத்தின் தேவை; அறிவுடையார் கடமை.

மன்னன் மகன் ஒருவன் தவறிச் சென்று, வேட்டுவசேரியிலகப் பட்டு வளர்ந்து அவர்கள் போல் வாழ்ந்து, தன்னையறியாது மயங்கி நிற்கும் போது, அவனைக் கண்ட மன்னவன் நீ என்னவன், நாடாள வேண்டியவன் வேடுவனாய் அலையலாமா எனக் கூறி அவனின் உண்மையான உயர்வை உணர்த்தி மன்னவனாக்குவது போல, ஐம்புலன் வழியிலகப்பட்டு அல்லலுறும் ஆன்மாவைத் திருவருள் குருவடிவாய் வந்து ஆட்கொள்ளும் என்பது சைவசித்தாந்தம் கூறும் உண்மை.

இப்பொழுது சைவசமயத்தவரின் உலகியல் வாழ்வில் வழிபாட்டில் இத்தேவை இருக்கிறது.

*"மன்னவன் தன் மகன் வேடரிடத்தே தங்கி*
*வளர்ந்தவனை அறியாது மயங்கி நிற்பப்*
*பின்னவனும் என்மகன் நீ என்றவரிற்பிரித்து*
*பெருமையுடன் தானாக்கிப் பேணுமா போல...."*

என்ற சிவப்பிரகாசம் எனும் சைவசித்தாந்த நூல் சொல்வது முன்பும் ஒருகால் நிகழ்ந்தது. இன்றும் தேவைப்படுகிறது.

ஏழாம் எட்டாம் நூற்றாண்டளவில் தோன்றிய சமய குரவர்களான ஞானசம்பந்தப் பெருமான், அப்பர் சுவாமிகள், சுந்தர மூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசக சுவாமிகள் முதலான அருளாளர் கள் சிவாலயங்கள் தோறும் அடியார்களுடன் சென்று சிவதொ ண்டுகள் செய்து, அவ்வத்தலங்கள் பற்றிய திருமுறைப் பாடல் களைத் தமிழிலே பண்ஒன்ற இசைபாடித் தமிழரைத் தலை நிமிர வைத்தார்கள்.

வேத, ஆகம உட்பொருள்களைத் தமிழ் வடிவில் தந்து சிவவழிபாட்டுக்கு உயிர் கொடுத்துச் சைவமும் தமிழும் சிவமும் சக்தியும் போல் பிரிப்பிலா உண்மை உயர்நிலை எய்த வைத்தார் கள்.

ஞானத்தின் திருவுருவான ஞானசம்பந்தப் பெருமான் தொடக் கம் தெய்வப்புலவராய சேக்கிழார் சுவாமிகள் வரை இருபத்தேழு அருளாளர்கள் தந்த பன்னிருதிருமுறைகள் தமிழரைத் தமிழராய்ச்

சைவராய் வாழவைத்தன. சைவமும் தமிழுமே தாயும் தந்தையு மெனப் பெருமைபெற வைத்தன.

சைவத்திருமுறைகள் பன்னிரண்டும் தோத்திர நூல்களாக மட்டுமன்றி முடிந்த முடிவான சைவசித்தாந்த உண்மைகளை உட்பொருளாகக் கொண்ட உயர்ந்த சைவ இலக்கியங்களாகவே உயிர்த்தந்தன.

"இலக்கியங் கண்டதற்கு இலக்கணம் இயம்பும்" தொன் னூல் வழக்கின்படி திருமுறைகளின் உட்பொருளாய் விரவியிருந்த சைவசித்தாந்த தத்துவங்களை பதின் மூன்றாம் நூற்றாண்டளவில் தோன்றிய சந்தான குரவர்கள் சைவசித்தாந்த சாஸ்திரங்களாக சைவ இலக்கண வடிவில் ஆக்கித் தந்தார்கள்.

*"வேதம் பசு, அதன்பால் மெய்யாகமம், நால்வர்*
*ஓதும் தமிழ், அதனின் உள்ளுறுநெய் - போதமிகும்*
*நெய்யின் உறுசுவையாம் நீள் வெண்ணை மெய்கண்டான்*
*செய்த தமிழ் நூலின் திறம்"*

என்று சான்றோர் கூறுவதுபோல வேதமெனும் பசுவின் பாலாகிய சைவாகமமெனும் நெய்யாகிய சைவத்திருமுறைகள் ஆகிய நெய்யின் சுவையாகச் சைவ சித்தாந்த சாஸ்திரங்கள் மலர்ந்தன. சைவசமயத்தின் உண்மையாகிய நெய்யின் சுவையை இந்த நீள் உலகிற்குக் காட்டிய ஒப்பிலாக் குருமணி மெய்கண்ட தேவர்

நெய்க்கும் அதன் சுவைக்கும் உள்ள தொடர்பு போன்றது சைவத்திருமுறைகளுக்கும் சைவசித்தாந்த சாஸ்திரங்களுக்கும் உள்ள தொடர்பு.

சைவத் திருமுறைதான் மெய்கண்ட தேவரைத் தந்தது; மெய்கண்ட தேவர் சைவசித்தாந்த சாஸ்திர தலைமணியான சிவ ஞானபோதத்தைத் தந்தார்.

அச்சுதகளப்பாளர் எனும் வேளாளர் குலதர்மம் பேணும் சைவவாழ்வு வாழ்ந்தவர். சிவமலாற் தெய்வமில்லை எனச் சிவனையே முன்வைத்து வாழ்ந்தவர். எல்லா வாழ்வும் வளமும் இருந்த போதும் பிள்ளைச் செல்வம் இல்லாமையால் வருந்தினார். தம்குல குருவாகிய சகலாகமபண்டிதரென்னும் அருணந்தி





சிவாசாரியாரிடம் குறையிரந்தார். "திருமுறைகள் இருக்கையில் குறையேது. திருமுறைக்குப் பூசை செய்து வழிபட்டு அதில் ஒரு ஏட்டை எடு அதில் சொன்னபடி செய், வேண்டியது கிடைக்கும்." என்றார்.

குருமொழிப்படி திருமுறை ஏட்டுக்கு பூசை செய்தார்கள். மனைவியும் தானும் வணங்கி வழிபட்டு ஏடொன்றை எடுத்தார்கள். அது ஞானசம்பந்தப் பெருமானின் திருமுறை ஏடு. ஏட்டைப் பிரித்துப் படித்தார்கள். என்ன ஆச்சரியம்.

*பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோடு உள்ளம் நினை*
*வாயினவே வரம் பெறுவர் ஐயுற வேண்டா வொன்றும்*
*வேயன தோள் உமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்*
*தோய்வினையார் அவர்தம்மைத் தோயாவாம் தீவினையே."*

என்றிருந்தது திருவெண்காட்டுத் தேவாரம்.

உமாதேவி பங்கனாகச் சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் திருவெண்காட்டுத் தலத்திலுள்ள சூரிய குண்டம், சந்திர குண்டம், அக்கினி குண்டம் ஆகிய முக்குளநீரில் ஆடி நோன்பிருந்தால் அவரைவிட்டுத் தீவினைகள் அகலும்; பிள்ளைச் செல்வம் முதலாக அவர் விரும்பும் வரம் கிடைக்கும்; சந்தேகமில்லை என அறுதியிட் டுக் கூறியது தேவாரம்.

அதன்படியே நோன்பிருந்தனர். தெய்வக்குழந்தையொன்று பிறந்தது. மூன்று வயதிலேயே ஞான உணர்வு ஒளிவீசத் தொடங்கி யது. அந்த வழியால் வந்த பரஞ்சோதி முனிவர் பிள்ளையின் ஞான நிலை கண்டு "மெய்கண்டார்" எனத் தீட்சா நாமம் இட்டு ஆசி நல்கிச் சென்றார்.

மூன்று வயது மெய்கண்டாரிடம் முதியவர்கள் பலர் மாணவராய்ப் பாடம் கேட்டனர். ஒரு நாள் இதறிந்த குலகுரு சகலாகம பண்டிதர் ஆகிய அருணந்திசிவாசாரியார் அங்கு வந்தார். 'சிறுபாலன் தானே, சகலாகமமும் கற்றுத் தேறிய எனக்கு இவன் எம்மட்டு' என்ற கர்வத்துடன் "சிறுவனே ஆணவம் என்றால் என்ன?" என்று கேட்டார். மெய்கண்டார் எதுவும் பேசாமல் அவர் நிற்கும் நிலையைச் சுட்டு விரலாற் காட்டினார்.

உண்மையுணர்ந்த அருணந்தி சிவம் மெய்கண்டார் காலில் வீழ்ந்து பணிந்து அவருக்குச் சீடரானார்.

மூன்று வயதில் ஞானசம்பந்தம் பெற்ற திருஞானசம்பந்தர் தந்த தேவாரத்தால் வந்த மெய்கண்டாரும் மூன்று வயதில் ஞான உபதேசம் செய்து நல்கியது தான் சைவசித்தாந்த சாஸ்திரங்களின் முடி மணியான சிவஞான போதம்.

சைவத்திருமுறைகளும், சித்தாந்த சாஸ்திரங்களும் எங்கள் இரு கண்கள் அல்லவா. இந்த ஞானக் கண் ஒளியை மங்க விடலாமா.

சமய குரவர்களும், சந்தான குரவர்களும் ஏற்றித் தந்த ஞானக் கண்பார்வை அந்நியர் ஆட்சிக்காலத்தில் மங்கிய போது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் தோன்றித் தன் செயற்கரும் திறனால் மீண்டும் ஒளிபெறச் செய்தார்.

இன்று மீண்டும் பார்வை மங்கி மாயாவாதமும் உலகாயத மும் நம்மவரை வழி தெரியாமல் தடுமாற வைத்துள்ளன. சிவசம்பந்தம் உடையது சைவம்; சிவபெருமானை முழுமுதற் கடவுளாக்க கொண்ட சமயம் சைவம். சிவம் என்பதற்கு மங்கலம் என்பது பொருள். எனவே சைவசமயம் என்றால் மங்கலமான சமயம் என்பது பொருள் அல்லவா.

அழகான மங்கலமான சைவசமயம் என்ற பேரைக் கைவிட்டு எமது சமயம் இந்து என்று சொல்வது எவ்வளவு பேதமை.

முதல் நூல்களான வேதாகமங்களிலோ அன்றி உபநிடதங்களிலோ, திருமுறைகள், சித்தாந்த சாஸ்திரங்களிலோ எங்காவது இந்து சமயம் என்று சொல்லப்பட்டதுண்டா? எங்கள் அருமருந்தன்ன சைவம் என்ற பெயர் இருக்க அந்நியர் எம்மைப் பார்த்து சொன்ன இந்து எனும் பொருளற்ற புனைபெயரைச் சொல்வது சிறுமை அல்லவா?

சென்ற காலத்தின் பழுதிலாத் திறத்தினையறிந்து, இனி எதிர்காலத்தின் சிறப்பினை நினைந்து, சைவர்களாகிய நாம் திருமுறைகளையும் சித்தாந்த சாத்திரங்களையும் எம்மிரு கண்களாகப் போற்றிப் படித்துணர்ந்து வாழத் தலைப்பட வேண்டும்.

எங்கள் இருப்பை, எங்கள் மூலத்தை அறிந்து தெளிந்து சைவர்களாகத், தமிழர்களாகத் தலை நிமிர்ந்து வாழவேண்டும்.

*"சிவமலால் தெய்வம் இல்லை"*



# தருமத்தின் வழிச்செல்வோம்

இவ்வுலகில் வாழும் ஒவ்வொரு உயிரும் இடையறாது ஏதோ செய்து கொண்டே இருக்கின்றன. ஓரறிவுடைய புல்பூண்டு தொடக்கம் ஆறு அறிவுடைய மனிதர் ஈறாக இது நடைபெறுகிறது. ஆனால் தான் செய்வது நல்லதா கெட்டதா, சரியா, பிழையா என்பதை அறியும் பகுத்தறிவு மனிதருக்கு மட்டும் தான் உண்டு. மனிதரிலும் பலர் நல்லது எது கெட்டது எது என்று தெளிந்து கொள்ளாமல் அவதிப்படுகின்றனர்.

எவர்க்கும் துன்பந்தராமல் தனக்கும் பிறர்க்கும் நன்மை தரும் கருமங்கள் நல்லவை. அவையே செய்யத்தக்கவை. பிறர்க்குத் துன்பந்தரக்கூடியவை தீயவை. அவை செய்யத்தகாதவை. நல்ல செயல்களைப் புண்ணியம் என்றும் தீய செயல்களைப் பாவம் என்றும் வகுத்து அறிந்து கொள்வதே பகுத்தறிவின் பயன் ஆகும்.

அறநெறி கூறவந்த ஔவையார் நமக்கு ஆகவேண்டியது புண்ணியம், நம்மிடமிருந்து போகவேண்டியது பாவம் என அழகாகக் கூறுவார்.

*புண்ணியமாம் பாவம் போம், போன நாள் செய்த அவை*

*மண்ணிற் பிறந்தார்க்கு வைத்தபொருள் - எண்ணுங்கால்*

*ஈதொழிய வேறில்லை எச்சமயத்தோர் சொல்லும்*

*தீதொழிய நன்மை செயல்.*

என்பது ஔவை கூறும் அறவுரை. எதனைச் செய்வதற்கும் ஒரு முதலீடு வேண்டும். இவ்வுலக வாழ்வுக்கு முதலீடு முன்னை நாட் செய்த அவையாகும். அதாவது முன்னாளில் செய்த நன்மையும் தீமையுமே - புண்ணியமும் பாவமுமே எம் வாழ்வுக்கு முதலீடாகும். புண்ணியத்தால் இன்பம் விளையும், பாவத்தால் துன்பம் விளையும். ஆதலால் எமது வாழ்வுக்கு முதலீடாகப் புண்ணியத்தையே செய்தல் வேண்டும்.

கந்தபுராணத்தில் ஒரு காட்சி, காசிப முனிவர் மாயை இடத்துப் பிறந்த தன் பிள்ளைகளாகிய சூரன், சிங்கன், தாரகன்

முதலியோர்க்கு வித்தியாரம்பம் செய்கிறார்.

"பிள்ளைகளே இவ்வுலகில் மிக உயர்ந்த பொருள் ஒன்றிருக்கிறது. அந்தப் பொருள் இம்மைக்கும் மறுமைக்கும் இன்பத்தைத் தரவல்லது. அது பெறுதற்கரிய பொருள். அதுதான் தருமம் ஆகும்.

*தருமம் என்றொரு பொருள் உளது தாவிலா*
*இருமை இன்பமும் எளிதின் ஆக்குமால்*
*அருமையில் வரும் பொருள் ஆகும் அன்னதும்*
*ஒருமையினோர்க்கலால் உணர்தற் கொண்ணுமோ.*

ஆதலால் நீங்கள் தருமத்தையே வாழ்வின் முதலீடாகக் கொண்டு வாழமுயலுங்கள்" என்கிறார்.

"தருமத்தைப் போற்றி வாழ்ந்தால் அன்பு நெறி தழைக்கும். தொடர்புடையவர்களிடம் உண்டாகும் அன்பின் பேறாக எல்லா உயிர்களிடத்தும் அருள் உண்டாகும். வாழ்வில் அன்பும் அருளும் உண்டாயின் அதுவே தவவாழ்வாகும். தவத்திற்கு இணையானது எதுவுமில்லை. தவம் இவ்வுலக வாழ்வில் இன்பத்தைத் தந்து வாழ்வின் பயனாகிய பேரின்பத்தைத் தரும்.

*தருமமே போற்றிடின் அன்பு சார்ந்திடும்*

*அருளெனும் குழவியும் அணையும் ஆங்கவை*

*வருவழித் தவம் எனும் மாட்சி எய்துமேல்*

*தெருளுறும் அவ்வுயிர் சிவனைச் சேருமால்*

ஆதலால் தருமத்தைப் போற்றுங்கள்" என்று உபதேசித்தார்.

இந்த உபதேசம் கச்சியப்ப சிவாசாரியாரால் இந்த உலகிற்குக் கூறப்பட்டது. இவ்வுபதேசத்தைக் கேளாது சூராதி அவுணர் தருமம் தவறியதால் அழிந்தொழிந்த கந்தபுராணக்கதை தருமந் தவறியதால் வரும் அழிவை எமக்கு உணர்த்துகிறது.

பெரியபுராணத்தில் ஒரு காட்சி, சேக்கிழார் சுவாமிகள் காட்டுகிறார்: மனுநீதி கண்ட சோழனுக்கு ஒரேயொரு மகன் வீதிவிடங்கன். அரசிளங்குமாரனாகிய வீதிவிடங்கன் ஒரு நாள் அரசவீதியிலே பரிவாரங்கள் சூழத் தேர் ஓட்டிச் செல்கின்றான். ஒரு பசுவின் கன்று ஓடிவந்து தேர்ச்சில்லில் அகப்பட்டு இறக்கிறது.





அக்கன்றின் தாய் கதறியழுது அரசமாளிகைக்குச் சென்று மாளிகை வாயிலில் கட்டப்பட்டிருக்கும் ஆராய்ச்சி மணியைத் தன் கொம்பினால் அடிக்கிறது.

ஆராய்ச்சி மணியோசை அனைவரையும் திகைக்க வைக்கிறது. சோழநாட்டில் எங்கோ தருமம் தவறி இருக்கிறது என்று மன்னன் பதறுகின்றான். அமைச்சரை அழைத்து விபரம் கேட்கிறான். அமைச்சர், "அரசே! தங்கள் புதல்வன் மணிகள் சப்திக்கும் தேரில் ஏறி, அளவில்லாத சேனைகளுடன், அரச வீதியிலே செல்லும் போது, ஒரு பசுவின் இளங்கன்று ஓடிவந்து தேர்ச்சில்லில் புகுந்து இறந்தது; அதனால் வேதனையுற்ற தாய்ப்பசு வந்து ஆராய்ச்சி மணியை அடித்தது" என்கிறார்.

அரசவீதி, மணியொலிக்கும் தேர், சேனையின் ஆரவாரம் இத்தனைக்குமிடையே ஏதுமறியா இளங்கன்று வந்து தானே தேர்ச்சில்லிடைப் புகுந்து இறந்தது. தங்கள் குமாரனின் பிழையல்ல என்பதைச் சொல்லாமலே உணர்த்துகின்றார் அமைச்சர். அத்துடன் "கோவதை செய்தார்க்கு அந்தணர்கள் வகுத்த முறையில் பிராயச்சித்தம் செய்து விடலாம்" என்றும் ஆலோசனை கூறுகின்றான்.

மனுநீதிகண்ட சோழனின் மனம் இதை ஏற்கவில்லை. மன்னவனாவான் "தன்னால், தன் பரிசனத்தால், ஊனமிகு பகைத் திறத்தால், உயிர்களால், கள்வர்தம்மால் ஆன பயம் ஐந்திலிருந்தும் உயிர்களைக் காப்பவனல்லனோ. என் மகனே ஒரு உயிரைக் கொன்றானென்றால், அதற்குப் பிராயச்சித்தமே இல்லை. தண்டனை அனுபவிக்கத்தான் வேண்டும்.

"நானும் என் மகனும் தருமம் தவறிப் பாழ் நரகில் விழக் கூடாது. இதற்குவழி பசுவின் கன்றைக் கொன்ற என் மகனை அதே வீதியில் தேரால் நெரித்துக் கொன்று விட வேண்டும். கன்றை இழந்த பசுபடும் வேதனையை, மகனை இழந்து நான் பட வேண்டும். இதுவே இப்பாவம் தீரவழி. ஆதலால் என் கட்டளை இது. உடனே நிறைவேற்றுங்கள்" என்றான். இச்செயலைச் செய்ய யாரும் முன்வராததால் அரசன் தானே தன்மைந்தன் மேல் தேரைச் செலுத்திக் கொன்றான்.

*ஒருமைந்தன் தன்குலத்துக்குள்ளான் என்பது முணரான்*
*தருமந்தன் வழிச் செல்கை கடன் என்று தன்மைந்தன்*
*மருமந்தன் தேராழி உறவூர்ந்தான் மனுவேந்தன்*
*அருமந்த அரசாட்சி அரிதோ மற்றெளிதோதான்.*

தருமந்தவறக் கூடாது; தருமத்தின் வழிச் செல்தலே கடமை என்றுணர்ந்த மன்னன் தனக்குப்பின் தன்குலம் காக்க வேண்டிய ஒரேயொரு வாரிசான தன்மைந்தனையே வீதியிற் கிடக்க வைத்துத் தானே தேரைச் செலுத்திக் கொன்றான்.

இச்செயலைக் காணச் சகிக்காத அனைவரும் ஒரு கணம் கண்களை மூடிக்கதறினர். மறுகணம் உமாதேவி சமேதராகச் சிவபெருமான் காட்சி கொடுத்து இறந்த கன்றும் அரசகுமாரனும் உயிர் பெற்றெழுதலும் வருந்திய பசுவும் மன்னனும் மகிழ்ந்தனர். காணுதற்கரிய பெருமானைக் கண்டனர். தருமத்தின் பயனை இந்த உலகு கண்டது.

மன்னன் இச்செயலை ஏன் செய்தான்? பசுவுக்கும் கன்றுக்குமாக மட்டுமல்லத் தனக்கும் தன்மைந்தனுக்குமாகவே செய்தான். இச்செயற்கருஞ் செயலால் இறந்த கன்று உயிர்பெற்றெழுந்தது. கன்றை இழந்து தவித்த பசு துயர் நீங்கியது. தன் ஆட்சியில் ஓர் உயிர் அநியாயமாக இறந்ததற்கான நீதியைச் செலுத்திய மன்னன் செங்கோல் தழைத்தது, இறந்த அரசகுமரன் தான் செய்த பாவத்திற் குத் தண்டனை பெற்று உயிர் பெற்றான். அந்நாடே சிவபெருமானின் திருவருளைப் பெற்றது.

கச்சியப்பசிவாசாரிய சுவாமிகள் கந்தபுராணத்தில், காசிபர் உபதேசத்தைக் கேளாமல் தருமம் தவறியதால் சூராதி அவுணர் களின் குலமே பூண்டோடு அழிந்ததைப் பார்க்கின்றோம். தெய்வப் புலவராகிய சேக்கிழார் சுவாமிகள் பெரிய புராணத்தில் மனுநீதி கண்ட சோழன் தண்டனைக்குரியவன் தன்மைந்தன் என்றும் கலங்காமல் தருமத்தை நிலைநாட்டியதால் அந்த நாடே வாழ்ந்தது, உலகு தருமத்தின் உயர்வைக் கண்டது என்பதைப் பார்க்கின்றோம்.

ஆதலால் ஆகவேண்டியது நன்மையாகிய புண்ணியம்; போக வேண்டியது தீமையாகிய பாவம்; என்பதுணர்ந்து தருமத்தைப் போற்றி வாழ்வோம். தருமத்தையே வாழ்வின் முதலீடாகக் கொண்டு தருமத்தின் வழிச் செல்வோம். பேரின்பப் பெருவாழ்வு பெறும் வழி அதுவே என்பதுணர்ந்து உய்தி பெறுவோம்.

# "கல்விச் செல்லத்துரை"



நல்லவரென்றும் வல்லவரென்றும்
கல்வியுலகத்தில் கலங்கரை விளக்காய்
அர்ப்பணிப்போடு அரும்பணியாற்றிய
அதிபர் என்றே அனைவரும் போற்ற
உழைப்பால் உயர்ந்த உத்தம நண்ப.

"சிறந்ததாய் விட்டுச் செல்" என்ற
சீரிய குறிக்கோள் சிறந்திடச் செய்தனை
அதிபரின் ஆளுமைச் சிறப்பால் மெய்கண்டான்
அடைந்த வெற்றிகள் அளவில என்பதை
அறிக்கை ஆய்வுகள் ஐயமின்றி
ஊரும் உறவும் உணரும் வகையில்
மாணவர் "முழுவிருத்தி" பெற்று மகிழ்ந்து
வாழவழிசெய்தது வள்ளல் நீரே
என்பதால் வாழ்த்தி இன்புறுகின்றோம்.

பிறமதத்தவரோர் பிள்ளைகள் பெரிதும்
நற்பயன் பெற்றிட நாளும் உழைத்தனை
நயவாதிருப்பின் அவர் நன்றி கெட்டோரே

கண்ணியமாகக் கடமையைச் செய்தனை
எண்ணரும் சவால்களை எதிர்கொண்டு வென்றனை
பணியே அணியாய்ப் பணிசெய்து காட்டினை
வாக்கும் வாழ்வும் ஒன்றிக்க வாழ்ந்து
பாடசாலையே சிறந்த வீடென
மாணவர் மகிழ்ந்து மலர்ந்து பொலிந்திட
ஆசிரியரெல்லாம் நின் அடிபோற்றி நடக்க
மெய்த்தவம் செய்தனை மெய்கண்டான் ஒளிர்ந்தது

நீடுவாழும் நின்புகழ், ஐய! சேவையை
நாடு மறக்குமோ! நல்ல அதிபரை
ஏடுபோற்றும் என்பது மெய்யே!

வணக்கம்

1998 03 28 **R. S. NADARAJAH** M.A., Dip.In.Ed., S.L.E.A.S.
*(EMERITUS PRINCIPAL PALALY T.C)*